பக்கங்கள்: 14

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாசி 05 வெள்ளிக்கிழமை 22.09.2023 கதிர் 315

### இனி இது ரகசியம் அல்ல!

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு நிகழ்வுகளில் உரையாற்றும்போது இலங்கையில் சீனாவின் நடவடிக்கைகள் குறித்து சந்தேகம் கொள்ளாதீர்கள் என்கிறார். அம்பாந்தோட்டை வர்த்தகத் துறைமுகம்தான், அதனைசீனாவின் இராணுவத் தளமாக முத்திரை குத்தப் பார்க்காதீர்கள் என்கிறார். தான் சீனாவோடோ இந்தியாவோடோ அணி சேரப்போவதில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

ஆனால், இலங்கையில் சீனர்களின் செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையின்றி சந்தேகத்திற்கிடமாகவே இருக்கின்றன என்பதுதான் பிரச்சினையே. ☞ 2

2,500 ஆண்டுகளின் முன்

# குருந்தூர்மலையினில் விகாரையே இருந்தது

## சைவ ஆலயம் இல்லை என்கிறார் சரத் வீரசேகர

(ந. லோகதயாளன்.)

முல்லைத்தீவு குறுந்தூர்மலையில் 2,500 வருடத்திற்கு முன்பு பௌத்த ஆலயமே இருந்தது சைவ ஆலயம் இருக்கவில்லை, எனவே அங்கு பொங்கல்செய்ய அனுமதிக்க முடியாது என சரத் வீரசேகர நாடாளுமன்றின் மேற்பார்வைக் குழுவில் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய விவகாரம் நாடாளுமன்றின் கலாசார அமைச்சின் மேல்பார்வைக் குழுவில் நேற்று ஆராயப்பட்டது.

நாடாளுமன்ற கலாச்சார மற்றும் தொல்லியல் கண்காணிப்புக் குழு, ☞ 2

## யார் இந்த ஹபுஹிம்?

உயிர்த்த தாக்குதலை நடத்திய சஹ்ரான் ஹசீம் தலைமையிலான குழுவினரின் தலைமை ஆலோசகரான 'ஹபுஹிம்' என்பவர் யார்? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை முதல் நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 8

# நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள நாடுகளுக்கு ஆதரவளிக்க முறையான திட்டம் தேவை

## நியூயோர்க்கில் ஜனாதிபதி வலியுறுத்து

நிதி நெருக்கடி காணப்படும் நடுத்தர வருமான நாடுகளுக்கு ஆதரவளிக்க முறையான திட்டம் தேவை என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

நியூயோர்க்கில்உள்ள ஐக்கியநாடுகள்சபையின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற அபிவிருத்திக்கான நிதியுதவி தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடலில் ஆற்றிய சிறப்புரையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

ஒரு பொதுவான கட்டமைப்பு அல்லது செயன்முறை இல்லாததன் விளைவாக நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் அவலநிலை குறித்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாகக்கூறுவதாயின், இலங்கை வங்குரோத்து நிலையை அறிவித்த பின்பு அனைத்து ☞ 2

# மைத்திரி - பொன்சேகா இடையே நேற்று சபையில் வார்த்தைப் போர்

முன்னாள்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகாவுக்கும் இடையில் சபையில் வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாககுதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளைபிரேரணையின் முதலாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றையாற்றிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,

முன்னாள்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்காது தனது கடமையிலிருந்து தவறியுள்ளார். அவர் தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்தினை நடத்தவில்லை. ☞ 2

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த

# இரகசிய சாட்சியப் பதிவுகளை மக்களுக்கு வழங்கவே முடியாது

## ஜனாதிபதியின் செயலாளர் மீண்டும் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான இரகசிய சாட்சி பதிவுகளை பொதுமக்களுக்கு வழங்க முடியாதென ஜனாதிபதியின் செயலாளர் தனக்கு கடிதம் ஒன்றின் மூலம் மீண்டும் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த இரகசிய சாட்சிப்பதிவுகளை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் பார்வையிட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் தொடங்கிய போது, சபாநாயகர் அறிவிப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவருடைய அறிவிப்பில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிகையின் இரகசிய ஆவணங்களைப் பொதுமக்கள் ☞ 8

# பிள்ளையானை விசாரித்தால் பல உண்மைகள் வெளிவரும்

## எதிர்க் கட்சி எம்.பி. தெரிவிப்பு

பிள்ளையானை முறையக விசாரித்தால் உயிர்த்த ஞாயிறு தொடர்பான பல விடயங்கள் வெளிவரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ☞ 2

# சர்வதேச விசாரணைக்கு பிள்ளையான் தயாராம்

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை நடத்தினால் அதனையும்எதிர்கொள்ள தயாராக உள்ளேன் என்றுஇராஜாங்கஅமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ☞ 2

# ராஜபக்ஷவினரைச் சம்பந்தப்படுத்தி விசாணையை திசை திருப்பவேண்டாம்

## ஆளும் தரப்பு பிரதமர கொறடா தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் ராஜபக்ஷவினரை சம்பந்தப் படுத்திவிசாரணைகளை திசைதிருப்ப இடமளிக்க வேண்டாமென ஆளும் கட்சியின்பிரதமகொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாககுதல் மற்றும் தேசியபாதுகாப்புதொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளைபிரேரணையின் முதலாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி ☞ 2

# உள்ளூர் விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது

## செல்வம் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் உள்ளூர் விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாதென நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாககுதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளைபிரேரணையின் முதல்நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ஆட்சியைகைப்பற்றுவதற்காக சிங்கள மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள் ☞ 8

# ஜோ பைடனின் விருந்தில் ரணில் பல தலைவர்களுடனும் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும்அமெரிக்க ஜனாதிபதிஜோபைடனும் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தனர். மேலும் பல தலைவர்களுடனும் ஜனாதிபதிசந்திப்புக்களை நடத்தினார்.



ஐ.நா. பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடரில் பங்குபற்றியஅனைத்துநாட்டுத் தலைவர்களுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வழங்கிய இரவுவிருந்துபசாரத்தின் போது ஜனாதிபதியை அவர் சந்தித்தார். அதற்கு மேலாக தனிப்பட்ட சந்திப்புக்கள் எவையும் இரு தலைவர்களுக்கும் இடையில் இடம் பெறவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மிகவும் சிநேகபூர்வமாக வரவேற்றதுடன், இடம்பெற்ற சிறு ☞ 8

# ரணிலின் வேலைத் திட்டத்தால் பணவீக்கம் 62 % குறைந்ததாம்

பல்வேறு புதிய சீர்திருத்தங்களுடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்து வரும் வலுவான வேலைத்திட்டத்தின் காரணமாக, கடந்த ஒரு வருடத்தில் நாட்டில் பணவீக்கம் 62.1சதவீதத்தினால் குறைந்துள்ளதாகபதில்நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1.8 பில்லியன் டொலர்களாக இருந்த நாட்டின் அந்நியச்செலாவணிக் கையிருப்பை, கடந்த ஓராண்டில், 3.8 பில்லியன்டொலர்களாக உயர்த்தஎமது ஆட்சிக்கு முடிந்துள்ளது.

2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில், ஒரு டொலருக்கு நாம் 361 ரூபா ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

யாழ்ப்பாணத்தில் கடலட்டை உற்பத்திப் பண்ணை உள்ளூர் நபரின் பெயரில் இருந்தாலும் அங்கு சீனர்களே பணியில் இருக்கிறார்கள். உத்தியோகபூர்வமான எந்தப் பணி அனுமதியும் இன்றியே அவர்கள் அட்டைப் பண்ணையில் பணியாற்றுகிறார்கள்.

சீனத் தூதுவர் திடீரென்று யாழ்ப்பாணம் வருகின்றார். மீனவர்களுக்கு உதவுகின்றார். வேட்டியுடன் நல்லூருக்குச் செல்கின்றார். பின்னர் காணாமல் போய்விடுகின்றார்.

சீனாவின் கப்பல்கள் இலங்கையில் ஆய்வுப் பணிகளுக்காகத்தான் வருகின்றன, அவை உளவு பார்க்க வரவில்லை என்ற ஜனாதிபதி சொல்கின்றார்.

இப்படிச் சீனர்களின் செயல்கள் எல்லாமே ஒருவித மர்மத்துடனேயே அமைக்கின்றன.

இப்போது வவுனியாவிலும் இதுபோன்ற சம்பவமே இடம்பெற்றுள்ளது.

இலங்கை இராணுவத்தினரின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று சுமார் 500 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. அதனை வழங்கிய குழுவினரில் பெரும்பாலானோர் சீனர்கள்.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் இராணுவத்தினராலேயே செய்யப்பட்டன. உதவிகளைப்பெறுவதற்கான பயனாளிகளைக்கூட அவர்களே தேர்வுசெய்தார்கள். மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கோ, கிராம அலுவலர்களுக்கோ அது பற்றி எதுவும் தெரியாது.

வவுனியா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இராணுவ அதிகாரிகளுடன் அதிக சீனர்களும் பங்குகொண்டு இவ் உதவிகளை வழங்கி வைத்தனர்.

பாடசாலைப் பொதிகள் , உணவுப் பொதிகள் பலவும் வழங்கப்பட்டன. நிகழ்வில் பௌத்த துறவிகள் பலரும் பங்குகொண்டிருந்தனர். சில மலேசியா வாழ் சீனர்கள் உட்படச் பெரும் எண்ணிக்கையிலான சீனர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு உதவிகளை வழங்கினர்.

இந்தச் சீனர்கள் யார்? ஏன் இராணுவத்தின் மூலம் மக்களுக்கான உதவிகளை வழங்கினார்கள்? அப்படி இரகசியம் காக்கப்பட வேண்டிய தேவை என்ன? அரச அதிகாரிகளிடம் இருந்து மறைக்குமளவிற்கு அந்தச் சீனர்கள் பற்றிய விவரங்களின் முக்கியத்துவம் என்ன?

இப்படி ஒரே மர்மமே நீடிக்கின்றது. சீனாவிற்கும் ஜனநாயகத்திற்கும் எட்டாப் பொருத்தம் என்பது தெரிந்தவிடயம். மனித உரிமைகள் குறித்து சீனா அக்கறைப்படுவதில்லை என்பதும் உலகறிந்த விடயம். சீனக் கமியூனிஸ்ட் கட்சி என்பது சர்வாதிகாரப் போக்கு நிறைந்தது என்பதும் தெரிந்த விடயமே, அப்படியிருக்கும்போது சீனர்கள் இங்கு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள இராணுவத்தினருடன் கூட்டுச் சேர்வதும் செயற்படுவதும் எப்படி மர்மமற்றதாக இருக்க முடியும்?

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## குருந்தூர்மலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொல்லியல்த் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட அரச அதிபர், மாகாண பிரதம செயலாளர், முல்லைத்தீவு பொலிஸ் அதிகாரி, கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் இந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர்.

அங்கேயே நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்தார். இதற்கான பதில் கருத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் முன்வைத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்த் துறையினையும் மாணவர்களையும் உள்ளடக்கி சமய விவகாரம், கலாசாரம், தொல்லியல் என 3 குழுக்களை உருவாக்கி அவற்றின் கண்காணிப்பில் கீழ் இதனை விடும்போது சர்ச்சை ஏற்படாது என்ற கருத்தை வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஒரு யோசனையை முன்வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்ந்த தற்போதும் வாழும் மக்களிற்குச் சொந்தமான 17 ஏக்கர் நிலத்தையும் உள்ளடங்கியே 224 ஏக்கரை சுவீகரிக்க தொல்லியல்த் திணைக்களம் கோருகின்றது. இதுவே மக்களிற்கு கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் 17 ஏக்கர் நிலத்தையும் விடுவிக்க வேண்டும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உமாமகேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.

இதனிடையே இச் சர்ச்சை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்ததாவது:

1938 ஆம் ஆண்டு தொல்லியல் இடம் என வர்த்தமானி அறிவித்தல் 78 ஏக்கருக்கே உண்டு. அதேநேரம் 2018 வரையும் குருந்தூர்மலையென இருந்த பகுதி 2020இல் எவ்வாறு குருந்தூர் விகாரையாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அன்றே அமைச்சர் தலைமையில் ஆய்வு செய்ய முற்பட்ட போது யாழ். பல்கலைக் கழகத்தையும் இணைக்குமாறு நாம் கோரினோம் ஆனால் மறுக்கப்பட்டது.

இதன் பின்பே அங்கே இரகசியமாக விகாரையை அமைத்து பிக்கு பேட்டி வழங்குகின்றார். இருந்தபோதும் அங்கே விகாரை இல்லை எனத் தொல்லியல்த் திணைக்களம் கூறுகின்றது. பௌத்த பிக்குவோ அந்த விகாரையின் மேல் இருந்து இந்த விகாரையை உடைக்க வருகின்றனர் எனச் செவ்வி வழங்குகின்றார் அவ்வாறானால் எது சரியானது?

குருந்தூர்மலையில் ஆய்வின்போது வெளிப்பட்டது சிவலிங்கம். அது சிவ சின்னம் என சைவ மக்கள் தெளிவாக கூறும் நிலையில் தொல்லியல்த் திணைக்கள அதிகாரிகளாகிய நீங்கள் அந்தச் சின்னத்தை பௌத்த அடையாளம் என தெரிவித்து வருகின்றீர்கள். ஆனால் இதே படத்தை தொல்லியல்த் திணைக்களம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் காட்சிப்படுத்தி இது சிவன் சிலை என எழுதியுள்ளனர். அவ்வாறானால் எது சரி?

நான் கிறிஸ்தவன் நீங்களே பதிலைக் கூறுங்கள் இது சிவன்சிலையா அல்லது பௌத்த சின்னமா என்பதனைத் தெளிவுபடுத்துங்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கேட்டார்

அவர் கூறியதைப் போன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் ஒரு படம் உள்ளது என்று வடக்கு மாகாண பிரதம செயலாளர் உறுதிப்படுத்தினார். அந்த மாவட்டத்தில் செயலாளராகக் கடமை புரிந்தவர் அவர்.

இங்கே தொடர்ந்தும் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன், குருந்தூர்மலையில் 1999 வரை இல்லாத விகாரை இப்போது அமைக்கப்பட்டிருப்பதோடு சிவன் ஆலயம் இருந்த இடத்தில் விகாரை அமைப்பதே பிரச்சனை - என்றார்.

இவை தொடர்பில் தொல்லியல்த் திணைக்கள அதிகாரிகள் கருத்து தெரிவிக்கும் போது, 78 ஏக்கருக்கு வெளியில் தமிழர் நிலமான 17 ஏக்கரையும் விடுவித்து மேலதிகமாக 3 ஏக்கரை விடுவித்து அதில் ஒரு ஏக்கர் நிலத்தில் விகாரையினையும் ஒரு ஏக்கரில் சிவன் ஆலயத்தினையும் அமைப்பதோடு மேலும் ஒரு ஏக்கரை பொது இடமாகவும் பிரேரிக்கலாம் என ஆலோசனை முன்வைத்தனர்.

இதேநேரம் 17 ஏக்கரை விடுவிக்க அனைவரும் இணங்கியபோதும் தொல்லியல்த் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியான சன்னஜெயசுமன 2010 முதல் 2015 வரை வடக்கில் எங்கெல்லாம் தொல்லியல் சின்னம் உள்ளது என அடையாளமிட்டுள்ளனர். அதனை வர்த்தமானியில் வெளியீடு செய்யவும இணக்கத்தை தாருங்கள் என்று கேட்டார்.

இது அதற்கான கூட்டம் இல்லை. இதனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சமர்ப்பித்து பகிரங்கப்படுத்தி மக்களின் கருத்தினைக் கேட்ட பின்பே இது தொடர்பில் ஆராயலாம் என தொல்லியல்த் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதிலளித்தார்.

இறுதியல் இரு மத ஆலயங்களும் அமைத்து 17 ஏக்கர் நிலத்தையும் விடுவிப்பது தொடர்பிலேயே விசேட கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ராஜபக்ஷ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

இந்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை கொண்டு வருபவர்கள் உயிர்த்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற போது ஆட்சியில் இருந்தவர்களே ஆவார்.

இந்த தாக்குதல் தொடர்பில் இன்று பேசுபவர்கள் தாக்குதலுக்கு தேவையான திட்டமிடல்கள் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உருவாக்கப்பட்டவையென தெரிவிக்கின்றனர்.

அவ்வாறானால் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே இந்த தாக்குதல் நடைபெற்றது அதற்கு முன்னர் 2015 ஆம் ஆண்டு முதல் நல்லாட்சி அரசாங்கமே நாட்டில் ஆட்சியில் இருந்தது. அவ்வாறானால் அந்த ஆட்சியினரே அவர்களின் திட்டமிடலுக்கு ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் இன்றும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். எனது மாவட்டத்திலும் சில பெற்றோர்களுக்கு பிள்ளைகள் இல்லை. பிள்ளைகளுக்கு பெற்றோர் இல்லை. கணவனுக்கு மனைவி இல்லை. மனைவிக்கு கணவன் இல்லை என பெரும்பாலானவர்கள் துயரங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அந்த தாக்குதலில் பலியானவர்கள் எவரும் பயங்கரவாதிகள் கிடையாது. தமது ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டவர்களே அநியாயமாக கொல்லப்பட்டார்கள். அதேவேளை ஹோட்டல்களில் உள்ள சாதாரண நபர்களும் கொல்லப்பட்டார்கள். இவ்வாறான படுகொலைகளை நாம் எவரும் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்க உயிர்த்த குண்டுத் தாக்குதல்களில் சம்பந்தப்பட்டவர்களை பாதுகாப்பதற்கு முயற்சிப்பதாக எதிர்க்கட்சியினர் நிலைப்பாடொன்றை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் பயங்கரவாதிகள் என்றால் அவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதில் நாம் ஒரே நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம் -என்றார்.

## பிள்ளையானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை ஒத்திவைப்புவேளை முதல்நாள் விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலதா மாளிகை மீது குண்டுத்தாக்குதலை நடத்தியவர், ஜோசப் பரராசசிங்கத்தை படுகொலை செய்தவர், திரிபோலி குழுவுக்கு தலைமை தாங்குவர் நாம் உரையாற்றும்போது இடையூறு விளைவிக்கிறார். இவ்வாறானவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளாமல் இருப்பது இந்த ஆட்சியின் தவறாகும்.

அவ்வாறனவர்களுக்கு நாம் பதிலளிக்க வேண்டியுள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கத்தை படுகொலை செய்த விவகாரத்தில் 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிள்ளையான் சிறையில் இருந்தார்.

அக்காலப்பகுதியில் சிறைக்குச் சென்ற சஹ்ரான் தரப்பினருக்கும், பிள்ளையானுக்கும் இடையில் தொடர்ப்பு ஏற்பட்டுள்ளது. 52 நாள் அரசியல் நெருக்கடி நீதிமன்றத்தின் ஊடாக தோற்கடிக்கப்பட்டவுடன், பிளான் 'பி' சிறைக்கூடத்தில் வகுக்கப்பட்டுள்ளது. ஆகவே பிள்ளையானை முறையாக விசாரித்தால் பல விடயங்கள் வெளிவரும் என்றார்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரோஷன் பெரேரா அவருடைய பெயரை கூறி ஒருசில விடயங்களை குறிப்பிட்டதை அடுத்து ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பி உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை மேற்கொண்டால் அதற்கும் தயாராக உள்ளேன். நீங்கள் எப்போது சர்வதேச விசாரணைகளை மேற்கொள்வீர்கள் என்று குறிப்பிடுங்கள்.

அதற்கு நான் தயாராகவே உள்ளேன். குண்டுத்தாக்குதல் இடம்பெற்று முடிந்த சம்பவம். எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் சிறுபிள்ளைத்தனமானவையாக உள்ளன என்றார்.

அதனையடுத்து உரையாற்றிய நிரோஷன் பெரேரா சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையானுக்கு இந்த குண்டுத்தாக்குல் சிறுப்பிள்ளைத்தனமானதாக இருக்கலாம். ஆனால் உயிரிழந்த, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இச்சம்பவம் சிறுப்பிள்ளைத்தனமானதல்ல, இவரின் வரலாற்றை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். பிள்ளையானுக்கு எதிராக வெகுவிரைவில் முறையான விசாரணைகளை முன்னெடுப்போம் - என்றார்.

## நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு நிதி கொடுக்கல் வாங்கல்களும் நிறுத்தப்பட்டதைக் குறிப்பிடலாம்.

இதன் காரணமாகப் பெரும் அரசியல் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருந்தாலும், அமெரிக்க அரசிடமிருந்து கிடைத்த பசளை நன்கொடையால் பல பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு இலங்கை மீண்டும் முன்னேற்றப் பாதைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறாகப் பார்க்கும்போது, நிதிச் நெருக்கடி காணப்படும் நடுத்தர வருமான நாடுகளுக்கு ஆதரவளிக்க முறையான திட்டம் தேவை என்பதை வலியுறுத்தும் அதேநேரம், இங்கு முன்வைக்கப்பட்ட அனைத்து முன்மொழிவுகளும் தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும் என்பதோடு, உலகளாவிய பொருளாதார நிலைமை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த ஆண்டு, எதிர்பார்க்கப்படும் உலகளாவிய மொத்த தேசிய உற்பத்தி 105 டிரில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது. இதில் 91 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் பொதுக் கடனாகும். எனவே, இந்த அனுமானங்களை மையப்படுத்தியே நாம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதனால் தற்போது எம்மிடத்தில் உள்ள விடயங்களை கொண்டு பயனடைய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அதன்படி சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 100 பில்லியன் அமெரிக்க டொலர்களை நீடிக்கப்பட்ட கடனாக பெற்றுக்கொள்ளும் இயலுமை உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பயன்டுத்துவதே இங்கு முக்கியமானதாக காணப்படுகின்றது.

அதனையடுத்து, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வருடாந்தம் 500 பில்லியன் டொலர்களையும் வழங்குவதாகவும், குறுகிய காலக் கடன்களை குறைந்த வட்டிவிகிதத்தில் நீண்டகாலக் கடனாக மாற்றப்படவேண்டும் எனவும் செயலாளர் நாயகத்தின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துவதற்கான அவசர வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இலக்குகள் எதிர்காலத்தில் அடைந்துகொள்ள வேண்டியிருப்பதால், செயலாளர் நாயகம் முன்வைத்த யோசனைகளை சாத்தியமாக்குவது தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். அதே சமயம், மேலும் இரண்டு முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்றாக உரம் மற்றும் எரிபொருளுக்கான மானியங்களை விரிவுபடுத்துவது தொடர்பான உலக வங்கியின் முன்மொழிவு மிக முக்கியமான யோசனையாகும். இதன்போது சேமிக்கப்படும் பணத்தை வேறு தேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்ளும் இயலுமையும் கிட்டும்.

அடுத்த முக்கியமான யோசனையாக, வர்த்தக நிதி தொடர்பான உலக வணிக அமைப்பின் முன்மொழிவை கருத முடியும். அதனால் ஏற்றுமதி விரிவுபடுத்தப்படும்.

கடன் வழங்குநர்களுக்கு நெருக்கடிகள் இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறேன். ஆனால் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்.

அந்தச் சலுகைகளை உடனடியாக வழங்காவிட்டால், இந்த முன்மொழிவுகள் பயனற்றதாகிவிடும். எங்களுக்கு பேச்சு மூலமான ஆதரவு கிடைத்துள்ளது. அந்த வார்த்தைகள் எப்போது செயல்படுத்தப்படும் என்று நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

தற்போதைய சவால்கள் மற்றும் அதற்கான பயனுள்ள தீர்வுகளை பற்றி பேசுவதற்கும் நிலையான அபிவிருத்திக்காக 2030 ஒழுங்கு பத்திரத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கும் உறுப்பு நாடுகளுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் இவ்வாறான உயர்மட்ட கலந்துரையாடல்கள் சிறந்த களமாக அமையும் -என்றார்.

## மைத்திரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை தவிர்த்துள்ளார்.

அதுமட்டுமல்ல அப்போதைய புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியாக இருந்த நிலந்த ஜயவர்தனவுக்கு ஏப்ரல் 4, ஏப்ரல் 20ஆம் திகதி மற்றும் ஏப்ரல் 21ஆம் திகதிகளில் தாக்குதல்கள் நடைபெறப் போகின்றது என்று இந்திய புலனாய்வு சேவைகள் தகவல்களை வழங்கியிருந்தன. ஏப்ரல் 21ஆம் திகதி காலையிலும் அவருக்கு இந்த தகவல் கிடைத்தது.

நிலந்த ஜயவர்தன, தினமும் இரண்டு முறை அன்றைய பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியை தொலைபேசியில் தொடர்புக்கொள்வார் அல்லது நேரில் சந்திப்பார். நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அவர் அதனை ஏற்றுக்கொண்டார். ஏப்ரல் மாதம் புத்தாண்டு தினத்தில் நிலந்த ஜயவர்தன, ஜனாதிபதியை சந்தித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி இந்தியாவுக்கு புறப்பட்டார். அப்போதும் நிலந்த ஜயவர்தன அவரை சந்தித்துள்ளார்.

தாக்குதல் நடத்தப்பட உள்ளமை தொடர்பான தகவல் கிடைத்தும், நிலந்த ஜயவர்தன அதனை பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தாமல் இருந்திருப்பார் என்றால், அவருக்கு சட்ட ரீதியாக கடுமையாக தண்டனையை வழங்க வேண்டும்.

நிலந்த ஜயவர்தன தகவலை வழங்கியிருந்தால் தேவையான நடவடிக்கைகளை எடுக்க தவறியமை தொடர்பில் அன்றைய ஜனாதிபதி பொறுப்பை ஏற்க வேண்டும். அன்றைய ஜனாதிபதியும் கோட்டாபய ராஜபக்ஷவும் நெருக்கமானவர்கள் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். டட்லி சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷவின் சிறந்த நண்பர்.

2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதியில் இருந்து அன்றைய பிரதமரான தற்போதைய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு பாதுகாப்புச் சபை கூட்டத்தில் பங்கேற்பதற்கு இடமளிக்கவில்லை.

ஒக்டோபர் 23ஆம் திகதியில் இருந்து பொலிஸ் மா அதிபரையும் பாதுகாப்புச் சபை கூட்டத்தில்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு ஆளுநரின் கருத்து கோழைத்தனமானது

## வேலுகுமார் சபையில் காட்டம்



போரை சமாதானமாக முடிக்க வேண்டும் என போராடி உயிர்நீத்த திலீபனை நினைவு கூருகின்ற ஊர்வலத்துக்கு சென்ற செல்வராசா கஜேந்திரனின் செயற்பாட்டை கண்டித்து அறிக்கை விட்டிருக்கும் கிழக்கு மாகாண ஆளுநரின் அறிக்கை கோழைத்தனமானது, அதனை அவர் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இன்று நாட்டில் இனவாதத்தை -இனமோதலை - தூண்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. யுத்தத்தை சமாதானமாக முடிக்க வேண்டும் என போராடி உயிர்நீத்த திலீபனை நினைவு கூருகின்ற ஊர்வலத்துக்கு சென்ற இந்த நாடாளுமன்றத்தை பிரதிநிதித்து-வப்படுத்துகின்ற செல்வராசா கஜேந்திரன் மீது மிலேச்சத்தனமாக தாக்கப்படுவதையும் அதனை பொலிஸார் பார்த்துக் கொண்டிருப்பதையும் நாங்கள் பார்க்கக்கூடியதாக இருந்தது.

ஆகவே இன்று இனமோதலை ஏற்படுத்தும் சூட்சுமம் நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது. அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருக்கின்ற கிழக்கின் ஆளுநர், செல்வராசா கஜேந்திரனின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது என கோழைத்தனமான அறிக்கையை விட்டிருக்கிறார்.

அஹிம்சாவாதியை நினைவு கூர்ந்த ஒருவர் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியாத முதுகெலும்பு இல்லாத அவர், முறை-யற்றது என கூறியிருக்கின்றமை கோழைத்தனமானது. அவர் தன்னுடைய அறிவிப்பை மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும். நாட்டில் தற்போது நடைபெறும் அத்துமீறல்கள் சமூக ஊடகங்களின் மூலமாகவே மக்களுக்கு வெளிக்கொண்டு வரப்படுகின்றன.

செல்வராசா கஜேந்திரனின் தாக்குதலையும் அவ்வாறே நாம் அறிந்து கொண்டோம். இன்று இந்த அரசாங்கத்துக்கு சமூக ஊடகங்களின் மூலமாக வெளிக்கொணரப்படும் விடயங்களை கட்டுப்படுத்திக் கொள்ளவோ அதற்கு விடையளிக்கவோ முடியாத நிலையில் புதிய சட்டம் இயற்றி புதிய சமூக ஊடக செயற்பாட்டாளர்களை அடிமைப்படுத்திக்கொள்ள அரசாங்கம் முயற்சி செய்கிறது.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது ஒரு ஜனநாயக விரோத செயற்பாடு. இந்த நாட்டிலுள்ள குடிமக்கள் தமது உரிமையைக் கேட்டால் அவர்களை பயங்கரவாதி என அடையாளப்படுத்தும் வேலைத் திட்டத்தை பயங்கரவாத சட்டத்தின் மூலம் ஏற்படுத்த அரசாங்கம் பார்க்கிறது.

அதேபோன்று ஜனநாயக அமைப்புக்கள், சமூக அமைப்புகள் யாவற்றையும் நாட்டின் ஜனாதிபதியின் மூலம் தடை யுத்தரவுகளை கொண்டுவருவதற்கான அவகாசத்தையும் அந்த சட்டத்தின் மூலம் அரசாங்கம் கொண்டுவரப் பார்க்கிறது. இவற்றை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும். இவற்றை கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மிகப்பெரியதொரு பொறுப்பு இருக்கின்றது. அவர் இந்த நாட்டின் பிரதமராக இருக்கின்ற போதே ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடைபெற்றது. ஆகவே, அந்த சூத்திரதாரிகளை அடையாளப்படுத்த வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கின்றது. பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு அவருக்கு இருக்கின்றது.

ரணில் விக்ரமசிங்க இதனை செய்வாரா அல்லது ராஜபக்ஷவினரைப் பாதுகாக்கும் வேலைத் திட்டத்தை செய்வாரா அல்லது அரசாங்கத்தைப் பாதுகாப்பாரா அல்லது இந்த நாடு, இனமோதலுக்குட்பட்டு எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலைமைக்கு தள்ளிவிடுவாரா என்ற அவரின் வேலையை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஆகவே சனல் 4 ஊடாக வெளி வந்துள்ள தகவல்கள் தொடர்பில் தேடிப்பார்க்க வேண்டும். அது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என பல அமைப்புக்கள் கோருகின்றன. உள்நாட்டு விசாரணையில் திருப்தியடைய முடியாது. ரணில் விக்ரமசிங்க விரும்பினாலும் இந்த அரசாங்கம் ஒருபோதும் சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காது அந்த குற்றவாளிகளும் அந்த சூத்திரதாரிகளும் இந்த அரசாங்கத்தில் இருப்பதே அதற்குக் காரணமாகும். - என்றார். (05)

# கூட்டுப்பொருளாதார ஆணைக்குழுவை விரைவில் நிறுவ ஈரான் அதிபர் பரிந்துரை



ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தொடருடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஈரான் ஜனாதிபதி கலாநிதி செய்யித் இப்ராஹிம் ரைசிக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு புதன்கிழமை நியூயோர்க்கில் இடம்பெற்றது.

இலங்கை மற்றும் ஈரானுக்கு இடையிலான நீண்ட கால உறவுகள் மற்றும் பல வருடங்களாக ஒருவருக்கு ஒருவர் வழங்கிய ஒத்துழைப்புக்களை நினைவுக்கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்த காலப்பகுதியில் ஈரான் வழங்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார்.

புதிய பிரவேசத்தின் ஊடாக இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை விரிவுபடுத்திக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த ஈரான் ஜனாதிபதி, இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்ளும் முகமாக கூட்டு பொருளாதார ஆணைக்குழுவொன்றை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

ஈரானிடத்திலுள்ள அதிநவீன விவசாய தொழில்நுட்பத் தெரிவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டதோடு, எதிர்காலத்தில் அது தொடர்பில் ஒத்துழைப்புடன் செயற்படுவது தொடர்பிலும் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

ஈரானுக்கும் இலங்கைக்கு இடையிலான பிராந்திய தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாகவும், இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் உறுப்பு நாடுகளையும் அதனில் இணைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் இரு நாட்டுத் தலைவர்களும் வலியுறுத்தினர்.

மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறையில், குறிப்பாக உமா ஓயா திட்டத்திற்கு ஈரான் வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உமா ஓயா பல்துறை திட்டத்தை திறந்து வைப்பதற்காக இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார்.

அந்த விஜயத்துக்கு இணையாக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்ள இருநாட்டுத் தலைவர்களும் இணக்கம் தெரிவித்தனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ், உள்ளிட்டவர்கள் இலங்கை சார்பில் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தோடு, ஈரான் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹொசைன் அமீர் அப்துல்லஹியனும் கலந்துகொண்டார். (05)

# கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர் அடுத்த மாதம் இணைக்கப்படுவார்கள்

## அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவிப்பு



கல்வியியல் கல்லூரிகளுக்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை ஒக்ரோபர் மாதத்தில் இணைத்துக்கொள்ள இருக்கிறோம். அதேபோன்று 2021ஆம் ஆண்டு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வர்த்தமானி அறிவிப்பு ஓரிரு வாரங்களில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ரோஹினி குமாரி கவிரத்ன கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது ரோஹினி குமாரி கவிரத்ன மேலும் தெரிவிக்கையில் -

2019, 2020 ஆம் ஆண்டுக்காக கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரியர் பயிற்சிக்காக இதுவரை மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

அவர்களின் பெயர்கள் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று 2021 ஆம் ஆண்டுக்கு கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வர்த்தமானி அறிவிப்பு இதுவரை வெளியிடப்படாமல் இருக்கிறது. 4 வருடங்களாக மாணவர்கள் பரீட்சை எழுதிவிட்டு பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் கல்வியியல் கல்லூரிகளில் தற்போது ஒரே ஓர் ஆண்டு மாணவர்களே பயிற்சி பெற்று வருகின்றனர். அடுத்த வருடம் பயிற்சி பெற்று வெளியேற ஆசிரியர்கள் இல்லை. மீண்டும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வெளியேற இருக்கின்றமை 2025 ஆகும். அதனால் 2019, 20, 21ஆம் ஆண்டு மாணவர்களை கல்வியியல் கல்லூரிகளுக்கு விரைவாக இணைத்துக்கொள்ள முடியாமல் போனால் மீண்டும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 2029 ஆம் ஆண்டிலேயே வெளியேறுவார்கள். அதனால் இது தொடர்பாக எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன எனக் கேட்கிறோம். -என்றார். இதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

2019, 2020 ஆம் ஆண்டுகளில் கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவாகி இருக்கும் 1400 மாணவர்களின் பெயர்கள் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களை 19 கல்வியியல் கல்லூரிகளுக்கு பிரிக்கவிருக்கிறோம். 2ஆம் ஆண்டு மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீடு முடிவடைந்து தற்போது மேற்பார்வை இடம்பெற்று வருகிறது.

இந்த நடவடிக்கை முடிவடைந்ததுடன் அடுத்த மாதம் ஆரம்பத்தில் இந்த மாணவர்கள் அனைவரையும் 19 பீடங்களுக்கும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அத்துடன் 2021 குழுவை கல்வியியல் கல்லூரிகளில் இணைத்துக்கொள்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிட நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஏற்கனவே வெளியிடப் பட்ட வர்த்தமானி அறிவிப்பில் சில திருத்தங்களை மேற்கொண்டு இன்னும் ஓரிரு வாரங்களில் வெளியிடப்படும். - என்றார். (05)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சைக்கு நோயாளர்களை இனங்காணும் பணி

*யாழ். மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு முற்றிலும் இலவசமாக சத்திரசிகிச்சையை மேற் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.*

*இந்த நடவடிக்கை கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவனின் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அத்துடன் இந்தத் திட்டம் ஐக்கிய இராச்சியத்தின் நிறுவனத்தல் ஒருங்கிணைக்கப்படுவதுடன், மலேசியாவைச் சேர்ந்த அலாக்கா மற்றும் ஆனந்தா நிறுவனம் இந்தத் திட்டத்துக்கான கண்வில்லைகளையும் மருந்துப் பொருள்களையும் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அந்தவகையில் எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும், அரியாலை நாவலடி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இலவச கண்பரிசோதனை இடம்பெறவுள்ளதாகவும் அதில் தெரிவு செய்-யப்படுபவர்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)*

# புதுக்குடியிருப்பில் நினைவேந்தல்

*முல்லைத் தீவு, புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் இறுதிப் போரில் உயிரிழந்த வர்த்தகர்களுக்கான நினைவேந்தல் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் புதன்கிழமை காலை நடைபெற்றது.*

*புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் த.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வர்த்தகர்களின் குடும்பத்தினர்கள், சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன், வர்த்தகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.*

*இதேவேளை குறித்த நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்வதற்காகப் புதுக்குடியிருப்பு வர்த்தகர்கள் அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(05)*

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையின் அயலுறவுக் கொள்கை

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைத்து நாட்டின் அயலுறவுத்துறைக் கொள்கை குறித்துத் தெரிவித்திருக்கக்கூடிய விடயங்கள் கவனத்துக்குரியவை.

அதிகாரப் போட்டிகள் மற்றும் மாறிவரும் கூட்டணிகளால் வரையறுக்கப்பட்ட சர்வதேச உறவுகளின் உலகில், இலங்கை தனது அயலுறவுக் கொள்கையில் நடுநிலையான அணுகுமுறையை மேற்கொள்வதில் உறுதியாக உள்ளது என்பதை ரணிலின் கருத்துக்கள் தெளிவுபடுத்தின. நியூயோர்க்கில் ‘ஆசிய நாடுகள்: 3ஆவது வருடாந்த இந்தோ–பசிபிக் தீவுகள் உரையாடல்’ என்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். இலங்கையின் நலன்களைப் பாதுகாப்பதில் அவரது வெளியுறவுக் கொள்கை நிலைப்பாடு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

நான் நடுநிலையாளன் அல்லன், இலங்கையின் நலன்களுக்கு ஆதரவானவன் என்று அவர் குறிப்பிட்டதன் மூலம் இலங்கையின் நலனுக்காகத் தான் எதனையும் செய்வார் என்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் மற்றும் தெற்கு பசிபிக் பகுதியில் உள்ள தீவு நாடுகள், முக்கிய உலக வல்லரசுகளுக்கு இடையேயான போட்டியில் சிக்கிக்கொள்ளத் தயங்குவதை ஜனாதிபதி விக்கிரமசிங்க அடிக்கோடிட்டுக் காட்டினார். இலங்கை உட்பட இந்த நாடுகள் தங்களின் சொந்த முன்னுரிமைகளான சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் அபிவிருத்தியில் கவனம் செலுத்தி, தமது இறையாண்மை மற்றும் சுதந்திரத்தைப் பேணுவதற்கு விரும்புகின்றன என்றார்.

இந்தியா அல்லது சீனா ஆகிய எந்தவொரு பெரிய சக்தியுடனும் இலங்கை தன்னை இணைத்துக் கொள்ளவில்லை என்ற ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கூற்று முக்கியமானது. மாறாக, நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது ‘இலங்கை சார்பு‘ என்பதில் வேரூன்றியுள்ளது என்பதையே அவரது கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. .

அம்பாந்தோட்டைதுறைமுகத்தை ‘சீன இராணுவத் தளம்’ என்று முத்திரை குத்துவது குறித்து கவலை தெரிவித்த அவர், இது இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்ட பாதுகாப்புடன் கூடிய வர்த்தக துறைமுகம் என்றும் தெரிவித்தார். அம்பாந்தோட்டையில் சீன இராணுவத் தளம் உள்ளதா அல்லது வர்த்தக துறைமுகம் உள்ளதா என்பது தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பில் தெளிவுபடுத்துமாறு அணிசேரா இயக்கத்திடம் கேட்டுக் கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பெரும் வல்லரசுகளுடனான உறவுகளில் சமநிலையை பேணுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை இது வெளிப்படுத்துகிறது.

சீன உளவுக் கப்பல்கள் பற்றிய செய்திகளையும் அவர் நிராகரித்தார், நீண்டகால ஒப்பந்தத்தின் கீழ் இயங்கும் ஆராய்ச்சிக் கப்பல்கள் என்று தெளிவுபடுத்தினார். இந்த விடயம் தொடர்பில், இலங்கை கடற்படையினரால் நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அண்மையில் இந்தியாவுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் திருத்தங்கள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இனி வரும் எந்தக் கப்பலும் அதன் கீழ் செயற்படும் எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இந்த நடைமுறையின் கீழ் வரும் எந்தவொரு கப்பலும் யாருக்கும் அச்சுறுத்தலாக இருப்பதைக் காண முடியாது என்று அவர் உறுதியாகக் கூறினார்.

அவரது கருத்துக்கள் பெரும்பாலும் மேற்குலக ஊடகங்களை இலக்கு வைத்ததாகவே இருந்தது வெளிப்படை. ஏனெனில் அவையே இலங்கையில் சீனாவின் நடவடிக்கை குறித்து அதிகம் கவனம் செலுத்தி வருகின்றன.

இந்தியப் பெருங்கடல் மற்றும் தென் பசிபிக் பகுதிகள் அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைப் பொறுத்தவரை மகத்தான மூலோபாய மதிப்பைக் கொண்டுள்ளன. எனவே இதனைப் பயன்படுத்துவதில் வல்லரசுகளுக்கு உள்ள போட்டியை தனக்கு மூலதனமாக்குவதிலேயே இலங்கை தொடர்ந்தும் குறியாக இருக்கின்றது. அதற்கு அணிசேராக் கொள்கை என்பது அதற்கு உதவிகரமாக இருக்கின்றது.

ஆனால், ஜனாதிபதி விக்கிரமசிங்க அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் அமெரிக்காவிற்கு இடையேயான பாதுகாப்பு உடன்படிக்கை பற்றித் தெரிவித்த கருத்து அவர் சீனச் சார்போடு நடந்துகொள்கிறாரோ என்ற தோற்றப்பாட்டையும் எற்படுத்தத் தவறவில்லை. ஏனெனில் அது ஒரு ‘தவறு‘ என்று விவரித்தார், மேலும் அது சீனாவை இலக்காகக் கொண்ட இராணுவக் கூட்டணி என்றும் விமர்சித்தார்.

அவர் ‘இந்தோ–பசிபிக்‘ என்ற வார்த்தையின் சந்தேகத்தை வெளிப்படுத்தினார், இந்த வார்த்தை அமெரிக்காவினாலேயே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. அதை ‘செயற்கை கட்டமைப்பு‘ என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இதுவும் அவரது பார்வை சீனச் சார்பை நோக்கியதாக இருக்கின்றதோ என்கிற ஐயப்பாட்டை ஏற்படுத்தவல்லது.

இலங்கைநீண்டகாலமாகவேஅணிசேராக்கொள்கையுடன்இயங்கி வந்தாலும், இனியும் இயங்கினாலும் தனது சுயநலனுக்காக அது ஒரு பக்கச் சாய்வைக் கொண்டிருக்கும் என்பதையே ஜனாதிபதியின் கருத்தக்கள் வெளிப்படுத்துகின்றன. பெரும் வல்லரசு போட்டிகள் மற்றும் மாறிவரும் கூட்டணிகளால் குறிக்கப்பட்ட உலகில், ஜனாதிபதி விக்கிரமசிங்கவின்அணுகுமுறைஎத்தகையவிளைவுகளைக்கொண்டு வரப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.



# பூனைக்கு யார் மணி கட்டுவது?

**என் சத்திய மூர்த்தி**



திரிகோணமலை பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதான தாக்குதல் குறித்து பெரும்பாலான தமிழ்பத்திரிகைகளின்செய்திகளும் விமர்சனங்களும்வரவேற்கத்தக்க மாறுதல். வழமையாக, இது போன்ற தாக்குதல்களுக்கு சிங்களவர்களை மட்டுமே குறைகூறி கூப்பாடு போடும் பத்திரிகைகள், இந்த முறை, தமிழர் தரப்பின் தவறுகளையும் சுட்டிக்காட்ட தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த தாக்குதல் குறித்த முதல் காணொலி காட்சிகள் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தின. கஜேந்திரன் வகையாறா மீது தாக்குதல் நடத்தியது, சுமார் அரை டஜன் சிங்களவர்களே. ஆனால், அதைவிட குறைவானவர்களே கஜேந்திரனுடன் திலீபன் நினைவேந்தல் ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தார்கள் என்பது அதிர்ச்சி அளிக்கக்கூடிய உண்மை.

தமிழ்பத்திரிகைகள் இத்துடன் நிறுத்திக்கொள்ளவில்லை. அவர்கள் நினைவுறுத்தியது போல், இது போன்ற ஒரு நிகழ்வு கடந்த 1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும் அரங்கேறியுள்ளது. அல்லது, அரங்கேற்றப்பட்டது. அன்று, முதல் முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இன்றைய தமிழர்களின் பெருந்தலைவர் என்று புதிய அடைமொழியுடன் அறியப்படும் சம்மந்தன் பெருவெற்றி அடைந்தார் என்றும் விமர்சர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

அன்றும் சரி, இன்றும் சரி, தமிழர்கள் முன்னெடுத்த ஊர்வலம், அவசியமில்லாமலே கிழக்கில் சிங்களவர் பகுதிகள் ஊடாக செல்ல எத்தனித்தபோதே இந்தத் தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்தன. இன்று இல்லை என்றாலும், கடந்தமுறை ஊர்வலததில் சென்ற தமிழர்கள், சிங்களவர்களைச் சீண்டிப் பார்த்தார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனால், அதுவே. அமைதியாகச் சென்ற தமிழ் ஊர்வலம் மீது சிங்கள 'காடையர்' தாக்குதல் நடத்தினர் என்று திரித்து கூறப்பட்டது.

என்ன, சென்ற முறையை வைத்து நோக்கும்போது, இந்த முறை இரண்டு பக்கத்திலும் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்பது ஆறுதல் அளிக்கும் விடயம். என்றாலும், இதில் தமிழர் தரப்பும், அரசும் நிரம்பப் பாடம் படிக்க இருக்கிறது.

### கேட்காமலே கிடைக்கும்

தமிழர்தரப்பிலிருந்துஒருகட்சி முன்னெடுத்த நினைவேந்தல் ஊர்வலத்திற்கு, கிழக்கில் ஆதரவு இல்லை என்பது குறிப்பிடத்தக்க விடயம், முன்னர், விடுதலை புலிகள் அமைப்புக் கலைமையை எதிர்த்து கருணா என்ற அறியப்படும் வினாயகமூர்த்தி முரளிதரன் கிளர்ந்து எழுந்தபோது அதன் பின்னர் இருந்த நியாயங்கள் தற்போதும் நிலைபெற்றுள்ளது என்பதனையே இது குறிக்கிறது.

அதாவது, இனப்பிரச்சினை விடயத்தில், வடக்குதமிழர்களுடன் கிழக்கு தமிழர்களும் ஒன்றாக நிற்கிறார்கள். ஆனால், அதற்கு அப்பாலும் சென்று, இரு பகுதி தமிழர்களுக்கு இடையேயும் இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளன. ஒருவருக்கான மற்றவரது ஆதரவு அதனை ஒட்டியே அமையும்.

அது போலவே, இரு தரப்பு தமிழர்களிடையே அரசியல் ரீதியாக உறவு இருக்கலாம். மிதவாத அரசியலிலும் இருவரும் கூட்டு நிற்கலாம். ஆனால் அது கூட நிகழ்வது இல்லை என்பதே உண்மை.

அதைவிட முக்கியமாக, கடந்த காலத்தை நினைவுறுத்துவது போலான நிகழ்வுகளுக்கு, கிழக்கு தமிழர்களின் ஆதரவை வடக்கு தமிழர்கள் கேட்காமலே கிடைக்கும் என்று நினைத்து செயல்படுவதும் ஏற்புடையது அல்ல. அந்த விதத்தில், வடக்கு தமிழர்கள் கேட்டாலும், கிழக்கு தமிழர்கள் தங்களது ஆதரவை அள்ளி அளித்து விடுவார்கள் என்று நினைத்து செயல்படுவது, அரசியல் தெளிவின்மையையே காட்டுகிறது. இது சமகாலத்திலும் தொடர்ந்து நிரூபணமாகிவரும் விடயம்.

### கானல் நீர்

ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னெடுத்த நினைவேந்தல் ஊர்வலத்தில், பத்துபேர்கூடத்தேறவில்லைஎன்று நினைக்கும்போது, அவருக்கான வாக்காளர்களின் தொடர்ந்த ஆதரவுகூடக் கேள்விக்குறியாகிறது. இது போதாது என்று, 2020 நாடாளுமன்றத் தேர்தலில், தமிழர்களின் பெருந்தலைவர் சம்மந்தன், தனது திருகோணமலை மாவட்டத்தில் விருப்பு வாக்குகளில் கடைசியாக வந்ததும் நினைவில் கொள்ளவேண்டியது.

தவிர, வடக்கு மாகாணத்தில் மட்டுமே வெகுவாக அறியப்படும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, கிழக்கில் அரசியல் செய்ய எத்தனிக்கும்போது, இனப் பிரச்சினையின் இணையும் தமிழர் தரப்புகள் கூட தள்ளிநின்று வேடிக்கை பார்த்தது என்றே தற்போதைய நிகழ்வுகளைக் கொள்ளவேண்டும். அதுவும்கடந்த முறை, திலீபன் நினைவேந்தல் நாளன்று, வடக்கில் அந்தக் கட்சி பிரச்சினை செய்ததை தொடர்ந்து, கிழக்கு மாகாண தமிழர்களும் சிறிது எச்சரிக்கையாக இந்த முறை நடந்துகொண்டார்களோ என்றும் கேள்வி எழுகிறது.

ஏன், பெரிய அளவில் சர்வதேச மீடியாக்களில் இடம்பெற்ற, 2021 பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான ’பி2பி’ ஊர்வலம், வட மாகாணத்தை சென்றடைந்த போது, அரங்கேறிய கலவரம், கிழக்கு மாகாணத்தவர்கள் எப்போதும் ஒரு படி கீழேதான் என்றயாழ்பாணகர்வச்செருக்கை நினைவூட்டியது. அதனை எதிர்த்த விடுதலை புலிகள் அமைப்பின் முன்னெடுப்புகள் எல்லாம் கானல் நீராகப் போனது என்பதும் உறுதியாயிற்று.

### பேரினவாதத் தாக்குதல்

தமிழர்தரப்புஉள்குத்துகளுக்கு அப்பால், அரசின் மெத்தனம் குறித்த கேள்வி எழுகிறது. குறிப்பாக, கஜேந்திரன் எம்.பி. மீது பொதுவெளியில், அதுவும் பட்டப்பகலில் தாக்குதல் நடந்தபோது, ஊர்வலத்தின் பாதுகாப்பிற்காக உடன்பயணித்த இரண்டு, மூன்று பொலிஸார் கடமை தவறினார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அது உண்மையும் கூட.

இதேகாலகட்டத்தில், தெற்கிலும் ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதல் நடந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, உறுப்பினர்கள்மீதானஇதுபோன்ற தாக்குதல்கள் நாடாளுமன்றத்தில் பிரச்சினையாக்கப்பட்டுள்ளது. அது குறித்த ஆளும் தரப்பின் பதில் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என்ற கருத்து நிலவுகிறது. அதிலும் உண்மை இருக்கிறது.

### பேரினவாத வெளிப்பாடு

சென்ற வருடம் அரகலய போராட்டத்தின் போது, ஒரே நாள் மாலைப் பொழுதில் ஆதுவும்

(5ஆம் பக்கம் பார்க்க...)

# பூனைக்கு யார் மணி கட்டுவது?.............



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பாக சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்குள் தென்னிலங்கை முழுமைக்குமாக சுமார் எண்பது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற தலைவர்களின் வீடுகள் எரியூட்டப்பட்டபோது, பாதுகாப்புத் துறையினர் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அந்த நிலையே இன்றும் தொடர்கிறது.

குறிப்பாக கஜேந்திரன் மீதான தாக்குதல். தனிப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மீது தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் ரீதியாகவும் இந்த தாக்குதல் நிகழவில்லை. மாறாக, இது இனப்பிரச்சினையை மையப்படுத்திய தாக்குதல். பேரினவாதத்தின் வெளிப்பாடு.

கஜேந்திரன் தாக்கப்படுவதற்கு முன்னர், அவர் சார்ந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இது போன்று பேரினவாத தாக்குதல்களுக்கு தொடர்ந்து உள்ளாகி வந்தார். அவர், தமிழர் அரசியலில் முக்கிய பங்காற்றிய ஒரு குடும்பத்தின் சமகால பிரதிநிதி. அவரது அரசியலை அனைத்து தமிழர்களும் ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ, அவரது இனப்பற்றையும் அரசியல் வம்சம் மற்றும் பாரம்பரியத்தையும் யாரும் மறுத்துவிட முடியாது. மறந்துவிடக்கூடாது.

அந்த வகையில், இரண்டு கஜேந்திரன்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை அனைத்துத் தமிழ் கட்சிகளும் கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இவை எல்லாம் வாய் வார்த்தைகளுடன் நின்றுவிடாமல், அவர்கள் அனைவரும் சேர்ந்து செயலாற்ற வேண்டிய கட்டாயம் மீண்டும் தோன்றி உள்ளது.

கடந்த காலங்களில், தமிழர்களின் காணியை அரசும் இராணுவமும் ஒரு தலைபட்சமாக சுவீகரித்துக்கொண்டது. அவற்றை இன்றளவும் முழுமையாக உரியவர்களிடம் ஒப்படைக்கவில்லை என்பதும் நினைவுகூரத்தக்கது.

அண்மை காலங்களில், முந்தைய கோட்டாபய ஆட்சியில் தொடங்கிய அட்டூழியம் தற்போதைய மிதவாத அரசியல்வாதி என்று அறியப்படும் ரணில் தலைமையிலும் தொடர்வது குறிப்பிடத்தக்கது. 2005 ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களால் 'ஏமாற்றப்பட்டு' தோல்வி அடைந்த ரணில், அடுத்த ஆண்டு தேர்தலில் சிங்கள-பௌத்த பேரினவாதிகள் பக்கம் சாய்வதற்குத் தயாராக இருப்பதையே இது காட்டுகிறது.



### கோட்டாவின் உத்தி

2019 ஜனாதிபதி தேர்தலில், முன்னர் யாரும் செய்யாத புதுமையான பரப்புரை உத்தியை கோட்டாபய தேர்ந்தெடுத்தார். முன்னெப்போதும் இல்லாத வகையில், தமிழர் பகுதிகளில் அவர் பரப்புரையே மேற்கொள்ளவில்லை. என்றாலும், அவர் தேர்தலில் பெருவெற்றி பெற்றார். இது ஒரு தவறான முன்னுதாரணமாகவே மாறிவிட்டது.

காரணம், கோட்டாவிற்கு முன், இனப்போரில் பெருவெற்றி பெற்ற அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 2010 தேர்தலில்கூட, வடக்கு-கிழக்கு பகுதிகளில் பரப்புரை மேற்கொண்டார். ஆனால் அவருக்கு தமிழர் ஆதரவு கிடைக்கவில்லை என்பது வேறு விடயம். அன்று, மஹிந்தாவை எதிர்த்து போட்டியிட்ட இனப்போர் காலத்திய இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை தமிழர் தரப்பு முட்டாள் தனமாக ஆதரித்தது. பின்னர், 2015ல் மைத்திரிபால சிறிசேனா, 2019ல் சஜித் பிரேமதாசா ஆகிய ராஜபக்சா-எதிர்ப்பு வேட்பாளர்களையே தமிழர்கள் ஆதரித்து வாக்களித் தார்கள்.

இவர்களில், சிறிசேனா மட்டுமே வெற்றிபெற்றார். தேர்தல் முடிவுகள் வெளியாகும் தினத்தன்று காலை நான்கு மணி சுமாருக்கு ஜனாதிபதி மஹிந்தா தோல்வியை ஒப்புக்கொண்டது, தமிழர்களின் பங்களிப்பை உலகிற்குப் பறைசாற்றியது. காரணம், அப்போது, தமிழர்களின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து மட்டுமே முழு தேர்தல் முடிவுகளும் வெளியாகி இருந்தன. அந்தக் கணக்கை வைத்தே மஹிந்தாவால் தனது தோல்வியை உறுதி செய்துகொள்ள முடிந்தது.

### பாம்பாட்டியின் மகுடி

ஆனால், தற்போதைய நிலைமை வேறு. கடந்த ஆண்டு பொருளாதார வீழ்ச்சி, அதன் காரணமாக உதித்த அறகலயா போராட்டம் ஆகியவற்றை தென்னிலங்கை மறந்தே விட்டது. அதன் காரணமாகவே, இனப்பிரச்சினை மீண்டும் கிண்டி, கிளறி எடுக்கப்படுகிறது.

தென்னிலங்கை அரசியல்வாதிகளை பொறுத்தவரையில், மீண்டும் தலைதூக்கும் உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதல்கள் அவர்களது வாக்குவங்கியை பிரிக்கும். அதற்கு மாறாக இனப்பிரச்சினை அவர்களை ஒன்றிணைக்கும்.

அல்லது, இனப்பிரச்சினை தேர்தலின் முக்கிய கருப்பொருளாகிவிட்டால், அதில் பேரினவாதிகளுக்கான ஆதரவு என்று கருதப்படும் தரப்பிற்கு வெற்றிவாய்ப்பு உள்ளது. எனவே, கடந்த காலங்களில் தமிழர் ஆதரவு நிலையெடுத்த ரணில், சிறிசேனா மற்றும் சஜித் ஆகியோரும் ஒருதலைபட்சமாகவே அரசியல் செய்வார்கள். இந்தப் பின்னணியில் தமி ழர்கள் செய்ய வேண்டியது என்ன? பாம்பாட்டியின் மகுடிக்குத் தொடர்ந்து ஆடிவந்த தமிழ்த் தேசியக் கூட்டணியைப் போல் இல்லாமல் தன்னிச்சையாக ஆனால் ஒற்றுமையாக செயல்படவேண்டும். அதன் ஒரு பகுதியாக ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் வேட்பாளரை முன்னிறுத்தலாம்.

இதில் தமிழ் வேட்பாளர் வெற்றி பெறுவார் என்பதல்ல எதிர்பார்ப்பு. ஆனால் தென்னிலங்கை, அதிலும் குறிப்பாக சர்வதேச சமூகத்திற்கு தமிழர்களின் அரசியல் மற்றும் சமூக ஒற்றுமை குறித்து விடப்படும் செய்தியாக அது இருக்கும். இன்று, இனப்பிரச்சினை விடயத்தில் சர்வதேசம் தமிழர்களுக்கு தொடர்ந்து போக்குகாட்டிவரும் நிலையில் அது அவசியமும்கூட. ஆனால், இது தொடர்பில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட்டாலே, அது தமிழர்களின் ஒருமித்த குரலாக ஒலிக்கும். பார்க்கப்படும். ஏற்றுக்கொள்ளப்படும். இதில் வட மாகாண தமிழர் கட்சிகளோடு நிறுத்தி விடாமல், கிழக்கு மாகாண தமிழர்களில் அரசியல் குரல்களையும் உள்ளடக்கிக் கொள்ளவேண்டும்.

தற்போதைய கேள்வி இதுதான்: வடக்கு மற்றும் கிழக்கு சேர்ந்தோ, அல்லது வடக்கு மட்டுமோ, பூனைக்கு யார் மணி கட்டுவது?

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd





# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 071 7354308**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road, Kilinochchi**




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| Ice Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swahpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# சைவ வழிபாட்டு மரபுகள்

சைவ சமயம் சிவநெறி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. சிவம் என்னும் சொல் பல நூற்றாண்டுகளாக திரிபுச் செல்லாக மாறி சைவம் என்று மாறியதாகக் கூறப்படுகின்றது. சைவ நெறி சிவ பெருமானை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயமாகும்.

இன்றைய இந்து மதத்தின் ஒரு பிரிவாக அமைந்துள்ளது. இந்து மதத்தின் சனாதன தர்மம் எனப்போற்றப்படும் சைவ சமயத்தின் வழிபாடுகள் ஐம்பூதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.


இந்து மதத்தின் நிகழ்வுகள் யாவும் நெருப்போடு தொடர்படையது. எல்லா சமூக நிகழ்ச்சிகளையும் தொழில் நிகழ்ச்சிகளையும் தொடங்கும் போது யாகங்கள் வளர்க்கப்படுகின்றன. யாகங்கள் வளர்த்து செயல்களைத் தொடங்குவது நல்லது என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

அதிலும் கணபதி ஓமம் செய்வது மிகவம் நல்லத என்ற நம்பப்படுகின்றது. காரியத்தை தொடங்கும் முன்பு கணபதி ஓமம் செய்வதால் தொடங்கிய காரியம் தடையின்றி நல்லமுறையில் நடைபெறும் என நம்பப்படுவதால் இன்று பரவலாக எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. இதனை வெள்ளிக்கிழமை செய்து வந்தால் பன் மடங்கு பெறலாம். அதிலும் பிரம்ம முகுர்த்தம் என்ற சொல்லப்படும் அதிகாலையில் கணபதி மந்திரங்களோடு தொடங்குவர்.

பொருள் வளம் பெருக கரும்புத்துண்டு கடன் தொல்லை நீங்கி செல்வச் செழிப்புடன் வாழ தேன் கொண்டும் சகல தறைகளிலும் வெற்றி பெற கொழுக்கட்டை திருமணத்தடை நீங்கி வாழ்வ பெற நெற்பொரி கொண்டும் வேள்வி நடத்துவர். வெண்பட்டினை நெய்யில் தோய்த்து மகாகணபதி மந்திரம் ஒலிக்க யாக வேள்வியில் இடும் பொழுது சகல விதமான நன்மைகளைப்பெறலாம். எட்டு வகைத் திரவியங்களோடு வில்வக்குச்சிகள் அறுகப் புல் சக்கரைப் பொங்கல் இவைகளால் கோமம் செய்வதால் நல்லபலன் கிடைக்கும் கருங்காலிக் குச்சியினால் செய்வதால்கடன் தொல்லை நீங்கும் வறுமை ஒழியும் நீர்நொச்சி கொண்டு ஓமம் செய்வதால் மழை பொழியும்.

மனித மனம் ஓம மந்திர ஒலியாலும் புகையாலுமு அமைதி அடைகின்றது. மூளையும் சுறுசுறுப்பாகின்றது. சுற்றுச்சூழல் சுத்தம் அடைகின்றது. சுமித்துக்களின் புகையால் நமது உடலில் இரத்த ஓட்டம் தூய்மை அடைகின்றது. மனம் தெளிவடைந்து ஓமத்தால் ஏற்படும் நறுமணக்காற்று மன அச்சத்தை அகற்றுகின்றது.

அத்துடன் அறிவுக் கூர்மை அடைகின்றது. தொற்று நோய்களை விரட்டியடிக்கும் வல்லமையும் ஓமம் புகைக்கு உண்டு. என அறிவியலாளர் கண்டு பிடித்துள்ளனர். அன்று போபாலில் ஏற்பட்ட நச்சுக்காற்றால் அங்குள்ளவர்கள் அத்தனை பேரும் உயிரை மாய்த்தனர். ஆனால் அதிகாலை ஓமம் வளர்த்த வீட்டில் இருந்த அத்தனை பேரும் பிழைத்தார்கள் என்ற செய்தி விப்பூட்டுவதாக அமைகின்றது. யாகத் தீயானது சுடர் விடும் போது பார்த்தால் கணபதியின் ஓவியம் அதில் பிரதிபலிக்கும் என்பார்கள். கணபதி ஓமத்தை மாதப்பிறப்பு சதுர்த்தி செய்வாய்க்கிழமை சங்கடகர சதுர்த்தி நாட்களில் செய்தால் விரும்பிய பலன்கள் கிடைக்கும் என்பர். சில சமயங்களில் யாகக் குண்டலத்திலுள்ள நெருப்புக் கூட கணபதியைப் போல காட்சி தருவதும் உண்டு என்றனர் முன்னோர். அத்துடன் நெருப்பு சிவனாகவும் சூடு பராசக்கியாகவும் அதன் நிறம் விநாயகராகவும் தோன்றும் ஒளி முருகனாகவும் எண்ணிவழிபட்டனர்முன்னோர்.



எனவே இவ் ஓமம் செய்பவர்கள் மட்டுமல்லாது காண்பவர்களும் கணபதியின் அருளைப் பெறுவர் அதனால் கணபதி ஓமம் செய்கின்ற போது அதில் கலந்து நல்ல உடல் வளமுடன் வாழ முயற்சி செய்யுங்கள்.

அடுதத்த மக்கள் செய்யும் வழிபாடுகளில் இருதய வழிபாடும் ஒன்றாகும். வசதி இல்லாதவர்களும் மகாகணபதி கோமத் தின் பலாபலன்களை அனுபவிக்க முடியும். எப்படி எனின் கடவுள் ஏழைபணக்காஜர் என்றவேறுபாடு பார்த்து பலன்களைப்பிரித்தத் தருவதில்லை ஓம குண்டம் அமைத்து வழிபாடு செய்ய முடியாதவர்கள் மானச வழிபாடு செய்யலாம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் பூசலார் என்பவர் இறைவனை மனக் கோயிலில் வழிபட்டதாகப் பெரிய புராணம் கூறுகின்றது. உடலும் உள்ளமும் தூய்மையாகஇருக்க உள்ளுணர்வில் இறைவன் நம் வழிபாட்டை ஏற்க வந்துள்ளதாக உணர்ந்து உபசாரங்களைச் செய்வது தான் மானச வழிபாடாகும்.




செடி கொடி மரம் இவற்றில் வேருக்குத் தான் சக்தி அதிகம்நாட்டமருந்துகள் வேரிலிருந்து தான் தயாரிக்கப் படுகின்றன. அது போன்ற கணபதி ஓமத்தின் மூல மந்திரத்திற்கு சக்தி அதிகம் மூல மந்திரத்தை 108 அல்லது 1008 தடவை உச்சரிப்பச் செய்தால் ஓமம் செய்த பலனைப் பெறலாம். தெய்வழிபாட்டில் ஐம்பெரும் பூதங்களைத் தனித்தனியாக வழிபடலாம். ஐம்பெரும் பூத வழிபாட்டில் ஒளி வழிபாடு தனிச்சிறப்படையது. மண்ணில் அழுக்குச்சேர்ந்தால்மண்ணும் அசுத்தமாகும். இவற்றால் காற்றும் கெட்டுவிடும். காற்றுத் தீய புகையால் ஆகாயமும் தூய்மை கெடும். ஆனால் ஆழுக்குப்பொருள் ஐநுருப்பில் இடும் பொழுது நெருப்பு அவற்றைப்பிரித்து தன்வசமாக்கி விடும்.

நாம் செய்த பாவங்களை இறைவன் அழித்து சிவமாக்குவான் அதனால் தான் எரிச்சுடராய் நின்ற இறைவா போற்றி என்று வழிபாடு செய்யப்படுகின்றது. ஒளி வழிபாடு சோதி வழிபாடு விளக்கு வழிபாடு அனைவராலும் எளிதில் செய்யக்கூடியது. விளக்கு வழிபாடு மும்மூர்த்திகளையும் மூன்று சக்திகளையும் வழிபட்டு நிறைவைத் தருகின்றது. கடவுள் ஒளி மயமானவர் என்பதே நமது வேதங்களில் காணப்படும் உண்மை. வேத நெறியில் வாழையடி வாழை என தோண்றிய அருளாளர்களும் ஆண்டவனை ஒளி வடிவாகவே கண்டனர்.

அருட்சோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம் என்று வள்ளளாரும் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை என்று மாணிக்கவாசகரும் எரிகின்ற இளஞாயிறு அன்ன மேனி ஒளிச்சுடரான மூர்த்தி என்று ஆன்றோரும் தீப மங்கள சோதி நமோ நம என்று அருணகிரி நாதரும் இறைவனைப்பற்றி அருளியிருக்கும் அருள் மொழிகள் இந்த உண்மையை நமக்குத் தெளிபுடுத்துகின்றது.

நமது சாதாரண புலன் அறிவுக்குப் புலப்படாமல் அண்டங்களுக்கு அப்பால் அருட்பெரும் சுடராய் நின்று அருள்பாலிக்கும் தெய்வத்தின் திரு உருவ வழிபாடே தீப வழிபாடாகும் . கடவுள் ஒளி வடிவானவர் என்பதை நமக்கு நினைவூட்டுவதே திருக்கார்த்திகைத்திருநாள்.



இருள் துன்பம் தருவது ஒளி இன்பம் தருவது ஒளி இன்றி உலகமும் இல்லை வாழ்க்கையும் இல்லை புற இருளைப் போக்குவது ஒளி அக இருளைப்போக்குவது ஒளி உணர்வ இருளாகிய துன்பம் நீங்கி அருளாகிய இன்பம் நிறைந்திட ஒளி வழிபாடு செய்கின்றோம். கேணி நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து நாம் அருந்தி தாகம் தீர்த்துக் கொள்வது போன்று அருட்பெரும் சோதி தனிப்பெருங் கருணையாகிய தெய்வத்தின் திருவருளை திருவிளக்கில் ஏற்றி வழிபட்டு நாம் துன்பத்தை தீர்த்துக்கொள்கின்றோம்.

திருவிளக்கு வழிபாடு இன்று நேற்று தோண்றியதல்ல ஆயிரக்கணக்கான ஆண்டுகளக்கு முன்பே தமிழ் மக்கள் இறைவனை சோதியாக வணங்கி போற்றியுள்ளனர். சங்ககால இலக்கியங்கள் இவ்வழிபாட்டை கார்திகை விளக்கீடு என்று குறிப்பிடுகின்றன. பெண்கள் விளக்க வழிபாடு செய்த நிகழ்வு அகநாநூறு நற்றினை போன்ற எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன.

சங்க இலக்கிய ஆய்வாளர்கள் சிலர் கார்த்திகை மாதத்தையே முதல் மாதமாகக்கொண்டு தமிழ்ப்பத்தாண்டு கொண்டாடப் பட்டதாக கருதுகின்றனர். தீப சோதி என்பது அக்கினித்த்துவமாகும். அக்கினியின் செரூபமாக ஈசனின் நெற்றிக்கண் அமைந்துள்ளது. அதில் எழுந்த ஞானசோதியால் காமனாகிய மன்மதனை எரித்தார்.

இந்த நன்நாளில் நாமும் நம் அறியாமையை அகற்றி ஞான தீப்தை மனதில் ஏற்றிக் கொண்டாடி மகிழ்வோம்.

இவற்றைத் தவிர ஏறக்குறைய நூற்றிற்குத் தொண்ணூறு சதவீதம் கோயில்களில் நவக்கிரகங்கள் இருப்பதைக்காணலாம். ஒன்பது தெய்வங்களும் ஒவ்வொரு திசைகளில் இருந்து வரும் பெருக வெளிச் சக்தியை அந்த அந்த கிரகத் தெய்வங்கள் மூலம் நாம் பெறுதல் வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் மிக நுட்பமாக ஆராய்ந்து அந்தந்தத்திசையில் இறைவழிபாட்டை வைததள்ளார்கள். இந்தக்கிரக நிலையைப் போல நமது உடலிலும் உள்ள உறுப்புக்கள் அந்தந்தத் தெய்வ நிலையுடன் தொடர்புடையதாகும். சூரியன் - இதயம், திங்கள் - மூளை, செவ்வாய் -பித்தப்பை, புதன் - நுரையீரல், சனி-மண்ணீரல்.

இவற்றின் மூலம் சைவ சமயத்தின் வழிபாட்டு மரபுகள் பற்றி இலகுவாக அறிந்து கொள்ள முடியக்கூடியவாறுஉள்ளது. அவற்றின் ஊடாக சைவ வழிபாட்டு மரபுகள் எவை என அறியக்கூடியவாறுஉள்ளன. ஆகஹிவு இவ்வாறான இயற்கையுடன் தொடர்புடையதாகக் காணப்படும் எமது சமய வழிபாட்டு முறைகளை அனைவரும் கைக்கொள்வதால் நோயற்றஇன்பமானவாழ்வைநாம் வாழலாம் எனடபது கண்கூடாகும்.

டிலக்சிக்கா
திருக்குடும்பக் கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.

காலைக்கதிர் Kalaikkathir

## நேபாளப்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

கலந்துக்கொள்ள அன்றைய ஜனாதிபதியானமைத்திரிபால இடமளிக்கவில்லை.

தாக்குதல் நடப்பதற்கு முன்னர் இரண்டு மாதங்கள் பாதுகாப்பு சபையின் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்நடப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு சென்றார், அங்கிருந்து சிங்கப்பூருக்கு சென்றார்.

முன்னாள் ஜனாதிபதி இந்தியாவில் இருந்த காலத்தில் சுரேஷ் சாலே அவரைச் சந்தித்திருப்பார் என்பதைநான்நூறுசதவீதம் நம்புகின்றேன். ஆகவே முன்னாள் ஜனாதிபதிக்கு தெரியாது தாக்குதல்கள் நடைபெறவில்லை என்றார்

இதன்போது ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பியவாறு எழுந்த மைத்திரிபால சிறிசேன, சரத்பொன்சேகா பொய்யுரைக்கின்றார். அவர் கூறுவது பச்சை பொய், திருப்பதிஎங்கேஇருக்கின்றது. சாலே எங்கே இருந்தார். பல முறை நான் திருப்பதிக்கு சென்று இருக்கின்றேன். இந்தியாவில்நான்சாலேவை சந்திக்கவும் இல்லை.

நான் இருந்த இடத்தை அவர்அறிந்திருக்கவுமில்லை. சரத்பொன்சேகா பச்சை பொய்களை கூறுகிறார். சுரத்பொன்சேகாஇராணுவத் தளபதியாகஇருந்தபோதுதான் இராணுவத் தலைமையகம் தாக்கப்பட்டது. இதனை மறந்துஇப்போதுபேசுகின்றார் -என்றார்.

இதன்போது, சரத்பொன்சேகா, அவரை வாயை மூடிக்கொண்டு அமரச் சொல்லுங்கள். இராணுவத்தலைமையகம் தாக்கப்பட்டமை குறித்த பதிலளிக்கின்றேன். தற்போது நான் கூறுவதை பொறுமையாக இருந்து கேளுங்கள். இராணுவத் தலைமையகம் தாக்கப்பட்டமைக்கு னனனஇராணுவத்தளபதி எவ்வாறுபொறுப்புக்கூறுவது. இராணுவத் தளபதி ஒரு பற்றாலியனுக்கு பொறுப்பானவர் அல்லர் அதற்கென ஒரு ஜெனரல் இருப்பார். அந்த விடயங்கள் உங்களுக்கு தெரியாது.

ஜனாதிபதி ஒருவர் எந்த நாட்டுக்குச்சென்றாலும்அந்த நாட்டில் உள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு பிரதானினைச் சந்திப்பது வழக்கமாகும் என்பதை மறந்து விடவேண்டாம். மேலும் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டபோதுசிங்கப்பூரில் 12மணியாக இருந்தது இருப்பினும் அங்கிருந்த இருந்த நீங்கள் பிற்பகல் 3 மணிக்குத்தான்வெளியேறும் முடிவினை எடுத்தீர்கள். ஆகவே உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கு முக்கிய காரண கர்த்தாக்களாக உள்ளவர்கள் இருவர். ஒருவர் கோட்டாபய ராஜபக்ஷமற்றையவர்மைத்திரிபால சிறிசேன. இவர்களின் இடையில் இருப்பவர் தான் சுரேஷ்சாலே. இடைத்தரகராக இருந்த அவரால் இவ்வளவு பெரியவிடயத்தினைச்செய்ய முடியாது - என்றார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தினோம். ஆனால்இந்த வருடம்ஒகஸ்ட்மாதத்தில்ஒரு டொலரை 321 ரூபாய்க்கு கொள்வனவுசெய்யமுடியும்.

இது செயற்கையான கட்டுப்பாடு இல்லை. ஆனால் டொலருக்கான கேள்வி - தேவைக்கு ஏற்ப உறுதியாக ரூபாயின் பெறுமதியை மிதக்க வைத்து, இந்த நிலைக்கு வரமுடிந்தமை பொருளாதாரரீதியாகமிகவும் முக்கியமானது என்றே கூற வேண்டும்.

2022 இல் 14 சதவீதமாக இருந்த வங்கி வைப்பு வட்டி விகிதம் தற்போது 11 சதவீதமாகக் குறைந்துள்ளதுடன், 15.5 சதவீதமாக இருந்த கடன் வட்டி விகிதத்தை, இந்த ஆண்டு 12 சதவீதம் வரை குறைக்க முடிந்துள்ளது.

கடந்த ஆண்டு முதன்மைக் கணக்குப் பற்றாக்குறை-247பில்லியன் ரூபாவாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு 27 பில்லியன்ரூபாவாகஅதனை அதிகரிக்க முடிந்துள்ளது. 40 ஆண்டுகளுக்குப் பிறகு, முதன்மைக் கணக்கு இருப்பு மேலதிகமாக இருப்பதையும் இங்கு கூறவேண்டும்.

2022இல்496,430ஆக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை, இந்த ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில்904,318ஆக அதிகரித்துள்ளது. 2022ஆம் ஆண்டில்சுற்றுலாவருமானம் 832.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன், அது, இந்த ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில் 1,304.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது, 56.7சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது.

மேலும், கடந்த வருடம் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் இலங்கைக்கு அனுப்பிய பணத்தின் அளவு 2,214.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அது இந்த வருடம் 3862.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மாறியுள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 74.4சதவீத அதிகரிப்பு என்று நிதி அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

பணப் பரிமாற்றப் பற்றாக்குறை காரணமாக எரிபொருளின் கேள்வியைக் கட்டுப்படுத்த, கியூஆர் குறியீடு முறை 2022 ஒகஸ்ட் 01 அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, சாதாரண கேள்விக்கும் விநியோகத்திற்கும் இடையே பெரும் இடைவெளி ஏற்பட்டது. 2023 ஜூன் மாதத்தில், கியூஆர் முறை சிறிது தளர்த்தப்பட்டபோது, டீசல் நுகர்வு 28 சதவீதமாகவும், பெட்ரோல் நுகர்வு 83 சதவீதமாகவும் அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியை நேரடியாகப் பாதிக்கும் எரிபொருள் விநியோகத்திற்காக விதிக்கப்பட்ட கியூ.ஆர். குறியீடு முறை செப்டம்பர் 01 முதல் முழுமையாக நீக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்ற போது 14 மணிநேர மின்வெட்டு காணப்பட்டது. இதுநேரடியாகப் பொருளாதாரத்தைப்பாதிக்கும் ஒரு விடயம். தற்போதைய ஆட்சியினால் மக்களுக்கு தொடர்ந்துமின்சாரம்வழங்க முடிந்துள்ளது.

அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையால், 2023 ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி, 1467வகையானஇறக்குமதிப் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்பட்டன. தற்போது 279 பொருட்களுக்கு மாத்திரமே தடை அமுலில் உள்ளது. 2020 ஆம் ஆண்டில், வாகனங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டது. ஆனால் இப்போது பொதுப் போக்குவரத்துக்குத் தேவையான பேரூந்துகள் மற்றும் பாரவூர்திகளை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2022 ஏப்ரல் மாதமாகும்போது, நாம் கடனை அடைக்க முடியாத நாடாக மாறிவிட்டோம். சர்வதேசநாணயநிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட கடன் திட்டத்தின்கீழ்நாம்இப்போது முதல் தவணையைப் பெற்றுள்ளோம்.

இவ்வாறு முழுமையாக, இந்த நாட்டின் பொருளாதாரத்தைகடந்தவருடத்துடன் ஒப்பிடும் போது உறுதியான நிலைக்கு கொண்டு வருவதற்கு எமது ஆட்சிக்கு முடிந்துள்ளது - என்றார்.

## யார் இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின்போது வலுவான பயிற்சிகளை பெற்று சக்தி வாய்ந்த வெடி மருந்துகளை பயன்படுத்தி நாட்டில் பலர் உயிரிழப்பதற்கு சஹ்ரான குழுவினர் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

நட்சத்திர ஹோட்டல்கள் உட்பட தேவாலயங்களில் ஒரே நேரத்தில் தாக்குதலை நடத்தவதற்கு சஹ்ரான் குழுவினரிடம் வெடிபொருட்கள் இருந்ததா அல்லது புலனாய்வு பிரிவினர்சஹ்ரான்குழுவினருக்கு வெடிபொருட்களை வழங்கினார்களா என்ற கேள்வி தற்போது ஒட்டுமொத்த நாட்டிற்கும் முன்னால் காணப்படுகின்றது.

ஜனாதிபதிஆணைக்குழு முன்வைத்த விடயங்களில் சில விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. குறிப்பாக ஜனாதிபதிஆணைக்குழுவின் விசாரணைகளில்'ஹபுஹிம்' என்றபெயரில்சஹ்ரானுக்கு மேல்அவருக்குஆலோசனை வழங்கியஒருவர்உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே ஹபுஹிம் என்பவரை அடையாளம் காண இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடமும் உதவியை பெற்றுக் கொள்ளுமாறு நான் கோரினேன். இந்தியாவே இந்த தாக்குதல்நடப்பதற்குமுன்னர் அது பற்றி எமக்கு எச்சரிப்பை வழங்கி இருந்தமையே இதற்கு காரணம்.

அப்படியானால் இந்தியாவின்புலனாய்வுசேவையினர் சஹ்ரான்உட்படகுழுவினரின் செயற்பாடு களை கண்காணித்து வந்துள்ளனர். இதனால், இந்தியாவின் உதவியுடன் ஹபுஹிம் என்ற நபர் இந்தியாவை சேர்ந்தவரா அல்லது இலங்கையை சேர்ந்தவரா என்பதை கண்டறிவது மிக முக்கியமாகிறது.

ஹபுஹிம் என்பவர் ஹபு சாலேவா அல்லது ஹபு ராஜபக்சவாஎன்பதைஅறிந்து கொள்வதுமிகமுக்கியமானது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

ஆகவே உயிர்த்த ஞாயிறுதாக்குதலில் ஈடுபட்ட அனைவரையும் அடைளம் காண்பதாக இருந்தால் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என்றார்.

## இரகசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட முடியாதது சம்பந்தமாக தற்போது இலத்திரனியல் மற்றும் அச்சூடகங்கள் மூலம் பொய்யான செய்திகள் வெளியிடப்பட்டுவருகின்றன.

ஜனாதிபதியின்செயலாளர் செப்டெம்பர் 12 உயிர்த்த ஞாயிறுதாக்குதல்தொடர்பான இரகசிய சாட்சி பதிவுகள் குறித்து எனக்கு கடிதம் மூலம் அறிவிப்பினை விடுத்துள்ளார். குறித்த சம்பவத்துடன்சம்பந்தப்பட்ட சாட்சியாளர்களின் அடையாளத்தை பாதுகாப்பதற்காக நடவடிக்கையை எடுக்க நேரிட்டுள்ளது.

அந்தச் சாட்சிய பதிவுகளின் 2.-II மற்றும் 2-III அலகுகளில் அடங்கியுள்ள இரகசிய சாட்சிஆ; பதிவுகள் உட்பட 2-I முதல் 5 வரையான முழுமையான அலகுகள்திருத்த முடியாதபடி உருவாக்கப்பட்டுள்ள 6 இறுவட்டுக்கள் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அதில் அடங்கியுள்ள 2-II மற்றும் 2-IIIஅலகுகளை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின்கண்காணிப்பின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

## ஜோ பைடனின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





உரையாடலுக்குப் பின்னர், ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க ஆகியோர் பைடன் தம்பதிகளுடன் குழு ஒளிப்படம் எடுத்துக்கொண்டனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தொடருடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொது நலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட்டைச் சந்தித்துப் பேசினார்.

இலங்கைக்கும் பொது நலவாய செயலகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் கடந்த வருடம் ருவண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டதீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர்.

காலநிலை மாற்றம், அது தொடர்பான திட்டங்களுக்கு நிதியளித்தல் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள்குறித்தும்சந்திப்பில் உரையாற்றப்பட்டன.

இந்த விடயங்கள் தொடர்பில் பொதுவான நிலைப்பாடொன்றைஏற்படுத்துவதற்காக பொதுநலவாய நாடுகள் அமைப்பினால் நடைமுறைப் படுத்தப்படும் வேலைத்திட்டத்தில்இலங்கை முன்னிலைவகிக்கத்தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

புலம்பெயர் சமூகத்துடனான மல்போரா இல்ல கலந்துரையாடலின் முன்னேற்றம் குறித்தும் செயலாளர் நாயகம் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தார்.

தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிற்கும்இடையில் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின்நிதித்துறை சீர்த்திருத்தங்கள் மற்றும் கடன்மறுசீரமைப்புவேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கையில் பணவீக்கத்தைக் குறைத்ததுடன், நாட்டில் வர்த்தகத்திற்குபொருத்தமான சூழலை உருவாக்கியமை மற்றும்சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மகிழ்ச்சி தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப இந்த ஆட்சி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினார்.

ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுக்கும்ஈரான்ஜனாதிபதி கலாநிதி செய்யித் இப்ராஹிம் ரைசிக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்றும்நடைபெற்றுள்ளது.

இலங்கை மற்றும் ஈரானுக்கு இடையிலான நீண்ட கால உறவுகள் மற்றும் பல வருடங்களாக ஒருவருக்குஒருவர்வழங்கிய ஒத்துழைப்புக்களை நினைவுக்கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்த காலப்பகுதியில் ஈரான் வழங்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார்.

புதிய பிரவேசத்தின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை விரிவுபடுத்திக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த ஈரான் ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்ளும் முகமாக கூட்டு பொருளாதார ஆணைக்குழுவொன்றை நிறுவவேண்டியதன்அவசியத்தையும் வலியுறுத்தினார்.

ஈரானிடத்திலுள்ள அதிநவீன விவசாய தொழில்நுட்பத் தெரிவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டதோடு, எதிர்காலத்தில்அது தொடர்பில் ஒத்துழைப்புடன் செயற்படுவது தொடர்பிலும் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

ஈரானுக்கும்இலங்கைக்கு இடையிலான பிராந்திய தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாகவும், இந்து சமுத்திரரிம் சங்கத்தின் உறுப்பு நாடுகளையும் அதனில் இணைத்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் இருநாட்டுத்தலைவர்களும் வலியுறுத்தினர்.

மின்சக்தி மற்றும் எரிசக்தித்துறையில், குறிப்பாக உமா ஓயா திட்டத்திற்கு ஈரான் வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்குநன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உமா ஓயா பல்துறை திட்டத்தினை திறந்துவைப்பதற்காக இலங்கைக்கான விஜயமொன்றினை மேற்கொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார்.

அந்த பயணத்திற்கு இணையாக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும்பலப்படுத்திக்கொள்ள இருநாட்டுத்தலைவர்களும் இணக்கம் தெரிவித்தனர்.

இதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் மலேசிய பிரதமர் அன்வர் பின் இப்ராஹிமுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்றும் நடைபெற்றது.

இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இலங்கையின் புதிய முதலீட்டு வாய்ப்புகளில் மலேசிய நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த பிரதமர் அன்வர் இப்ராஹிம், மலேசியாவுடன் சுதந்திரவர்த்தகஒப்பந்தத்தை கைசாதிடுவதற்கான இலங்கையின் கோரிக்கைக்கும்சாதகமான பதிலை வழங்கினார்.

அத்துடன், வலயத்தின் விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில்அங்கத்துவம் பெறுவதற்கான இலங்கையின் கோரிக்கையை ஆதரவளிப்பதாக மலேசியப் பிரதமர் தெரிவித்தார்.

அடுத்தமாதம்கொழும்பில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர ரிம் கூட்டமைப்பின் பிராந்தியமாநாட்டில்மலேசிய வெளிவிவகார அமைச்சர் பங்கேற்பார் எனவும் பிரதமர் அன்வர் பின் இப்ராஹிம் உறுதியளித்தார்.

மலேசியாவிற்கு விஜயம் செய்யுமாறு மலேசிய அரசரின் அழைப்பை மலேசிய பிரதமர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவும்அடுத்த வருடம் மலேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக உறுதிப்படுத்தினார்.

## உள்ளூர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதை நோக்கமாகக் கொண்டு தமிழ் பேசும் மக்களை அழிப்பது அல்லது பணயம் வைக்கும் சூழல் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம்எமக்குஎழுகின்றது.

சிலரின் செயற்பாடுகள் காரணமாக தமிழர்கள் எவ்வாறு துரோகிகளாகப் பார்க்கப்பட்டார்களோ அதேபோலஉயிர்த்தஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் மக்கள் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியில்இருந்தபோது, இந்த விடயம் தொடர்பில் இந்தியா தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ள போதும், அதற்கு முக்கியத்துவம் வழங்காது தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் அதனை ஏற்றுக்கொண்ட துர்ப்பாக்கிய நிலையை அவதானிக்க முடிகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 ஊடக நிறுவனம் வெளியிட்டுள்ள ஆவணப் படத்தின் உண்மைத் தன்மையை ஆராய்வதை விட இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையிலான உறவை பிரிப்பதற்காகவா உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடாத்தப்பட்டதுஎன்றகேள்வி எமக்குள் உள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களில் வெளிநாட்டவர்களும் இருக்கின்ற நிலையில், சர்வதேச விசாரணை அவசியமாகும். அதற்கான நடவடிக்கைகளைஅரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்விடயத்தில்சர்வதேச விசாரணையைக் கோரும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கோரிக்கையினை நாம் வலுவாக ஆதரிக்கின்றோம்.

அதேபோன்று வடக்கு மற்றும்கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அசாம்பாவிதங்கள் தொடர்பிலும் குரல் எழுப்புமாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்மகின்றோம்.

அந்த மக்களும் போர் நிறைவுக்கு வந்து 14 ஆண்டுகளாக நீதிக்காக போராடி வருகின்றார்கள். ஆனால் அவர்களுக்கான நீதி இற்றை வரையில் நிலைநாட்டப்படவில்லை - என்றார்.

# வெறுப்புணர்வுப் பேச்சுகளை கல்வி மூலம் முறியடிப்போம்

## சுகுமார் ரொக்வூட் அறைகூவல்

பெரும்பாலும் புறக்கணிப்பு, அச்சம், தவறான புரிதல் போன்றவற்றிலிருந்து உருவாகும் வெறுப்புணர்வுப் பேச்சுகளை சீரான கல்வியின் மூலம் குறைத்துக்கொள்ளமுடியும் என்றும், அத்தகைய கல்விச் செயன்முறையை நோக்கிப் பயணிக்கவேண்டும் என்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வூட் அறைகூவல் விடுத்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) சர்வதேச சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதனை முன்னிட்டு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 'கல்வியின் ஊடாக வெறுப்புணர்வுப்பேச்சைக் கையாள்தல்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வு புதன்கிழமை கொழும்பிலுள்ள பத்திரிகை ஸ்தாபனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் தொடக்கவுரை ஆற்றிய இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வூட், கல்வியின் ஊடாக வெறுப்புணர்வுப்பேச்சைக் கையாள்தல் தொடர்பில் கடந்த ஜூன் மாதம் காத்மண்டுவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஹாஷ்டக் ஜெனரேன் அமைப்பு மற்றும் அரிகாடோ அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து தமது ஆணைக்குழுவும் கலந்துகொண்டதாகவும், அங்கு ஆரா யப்பட்ட விடயங்களை அமுல்படுத்தும் நோக்கிலான முதற்கட்ட நடவடிக்கையாகவே இந் நிகழ்வை ஒழுங்குசெய்திருப்பதாகவும் தெளிவுபடுத்தினார்.

'துரதிஷ்டவசமாக வெறுப்புணர்வுப்பேச்சு பல்வேறு ஊடகங்கள் வாயிலாகப் பகிரப்படுகின்றன. இவை தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்குமான வாய்ப்புக்கள் அற்ற நிலையில், பெருமளவான சிறுவர்கள் இத்தகைய வெறுப்புணர்வுப்பேச்சுக்களுடன் தொடர்புபடுகின்றனர். எனவே இளம் வயதிலேயே இத்தகைய வெறுப்புணர்வுப்பேச்சுக்கள் தொடர்பில் தெளிவாக சிந்திப்பதற்கும், சகமனிதர்கள் மீதான கருணை மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதற்குமான வாய்ப்பை உருவாக்குவதே 'கல்வியின் ஊடாக வெறுப்புணர்வுப் பேச்சைக் கையாள்தல்' என்ற கருத்தியலின் பிரதான நோக்கமாகும். பெரும்பாலும் புறக்கணிப்பு, அச்சம், தவறான புரிதல் போன்றவற்றிலிருந்து உருவாகும் வெறுப்புணர்வுப்பேச்சுக்களை சீரான கல்வியின் மூலம் குறைத்துக்கொள்ளமுடியும்' என்றும் சுகுமார் ரொக்வூட் நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை கல்வியின் மூலம் வெறுப்புணர்வுப் பேச்சைக் கையாளும் போது, அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும், பரஸ்பர மரியாதையுடன்கூடிய கலந்துரையாடல்களுக்கு இடமளிப்பதற்கும் அது கொண்டிருக்கும் இயலுமை தொடர்பாகவும் அவதானம் செலுத்தவேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார்.

அவரது உரையைத் தொடர்ந்து இலங்கையில் வெறுப்புணர்வுப்பேச்சு தொடர்பான பகுப்பாய்வு, ஊடகங்களில் வெளிவரும் வெறுப்புணர்வுப்பேச்சுக்களை முறியடித்தல், வெறுப்புணர்வுப் பேச்சைக் கையாள்வதில் கல்வியின் வகிபாகம் ஆகிய விடயப்பரப்புக்களைஉள்ளடக்கிய விரிவாக குழுக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற அதிதிகள் வெறுப்புணர்வுப்பேச்சு என்றால் என்ன?, இலங்கையின் வெறுப்புணர்வுப்பேச்சு வியாபித்துள்ள விதம், ஊடகங்களில் வெறுப்புணர்வுப்பேச்சுக்களின் உட்சேர்க்கை, அதனைக் கையாள்வதற்கான நடவடிக்கைகள், வெறுப்புணர்வுப்பேச்சைக் கையாளக்கூடியவாறான கல்விச்செயன்முறை, அதற்கான சாத்தியப்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பகிர்ந்துகொண்டனர். (05)

# ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்

## திட்டத்தின்கீழ் பாடசாலை உபகரணங்கள் வழங்கல்







'ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்' என்ற மகுட வாசகத்தின் கீழ் இணைந்த கரங்கள் அமைப்பு தனது கால் தடத்தைப் பதித்து, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவச் செல்வங்களது கல்விச்செயற்பாடுகள், இடைநடுவே கைவிடப்படும் அவல நிலையை ஒழிக்குமுகமாக, நாடு முழுவதும் பரந்துபட்டளவில் செயற்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இணைந்த கரங்கள் அமைப்பால் இம்முறை, பதுளை மாவட்டம் ஸ்பிரிங்வெளியில் அமைந்துள்ள ஊவா/பது/மேமலை தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு தனது கல்வி உதவிக் கரங்களை நீட்டியுள்ளது. ஏறத்தாழ 150 இற்கும் மேற்பட்ட இம்மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் பாதணிகள், புத்தகப்பை என்பன வழங்கி வைக்கும் இந்நிகழ்வு, பாடசாலை அதிபர் எஸ்.திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.

இணைந்த கரங்கள் இணைப்பாளர்களான சி.காந்தன், எம். ஜெகனாதன், திருமதி எல்.சங்கீதா, திருமதி ஏ. பங்கயற்செல்வி ஆகியோரது ஒருங்கிணைப்புடன் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

















4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# சரணடைந்தவர்களை படுகொலை செய்துவிட்டு கொக்குத்தொடுவாயில் குழி தோண்டி புதைப்பு

## வினோ எம்.பி. காட்டம்

'சரணடைந்தவர்களைப் படுகொலை செய்துவிட்டு குழி தோண்டிபுதைத்தவர்களையே கொக்குத்தொடுவாயில் காணக் கூடியதாக உள்ளது' என நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

சர்வதேச சமாதான தினமான இன்று (நேற்று) இந்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். 'காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியான விசாரணை வேண்டும், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி சர்வதேச நியமங்களின் பிரகாரம் அகழப்பட வேண்டும்,போர்க்குற்றவாளிகள் இனம் காணப்பட்டு அவர்கள் சர்வதேச பொறிமுறையின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும்' உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இங்கே ஆட்சி செய்கின்றவர்களுக்கு சமாதானம் என்பது தேவையில்லாத விடயமாகவுள்ளது. ஆட்சிப் பீடம் ஏறுகின்றவர்கள் இனவாதக் கருத்துக்களை முன்னிறுத்தி பௌத்த மேலதிக்க சிந்தனையுடன் பெரும்பான்மை பேரினவாத சக்திகளின் ஆதரவுடன் ஆட்சிபீடம் ஏறத்துடித்துக் கொண் டிருக்கின்றார்கள்.

சிறுபான்மை மக்களுக்கு - தமிழ்மக்களுக்கு - நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வை இனப்பிரச்சினைக்கான தீர்ப்பதற்கான எந்த வழி முறையையும், பொறிமுறையையும் தேடாமல் குறிப்பாக தொடர்ச்சியாக அரசியல் செய்வதற்காக நாட்டை ஆழுவதற்காகத்தான் சமாதான முயற்சிகளில் அக்கறையற்றவர்களாக இருக்கின்றார்கள்.

இறுதிப்போரில்அனைவரும் பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்தார்கள். சரணடைந்தவர்களுக்குப் பாதுகாப்பு தருகின்றோம், உங்களை நல்ல வாழ்கைக்கு கொண்டு செல்கின்றோம், நீங்கள் எங்களிடம் சரணடையுங்கள் என்று ஒலிபெருக்கி மூலம் இறுதி போர்க்கால பகுதியில் அறிவித்துவிட்டு சரணடைந்தவர்களை படு மோசமாகக் கொலை செய்துவிட்டு குழி தோண்டி புதைத்தவர்களைத்தான்நாங்கள் இந்த கொக்குத்தொடுவாயில் காணக்கூடியதாகஇருக்கின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி என்பதை விட அதுஒருபோராளிகளின்புதைகுழியாகத்தான் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதற்கு சர்வதேச நிபுணர் குழுவைக் கொண்டுவந்து அவர்களுக்கு முன்னால்தான் இந்தப்புதைகுழியைத்தோண்ட வேண்டும்இங்குள்ளவர்களைக் கொண்டு பரிசோதிக்கின்ற பட்சத்தில் முடிவைக் காணமுடியாது இந்த அரசாங்கத்தின் மீது எங்களுக்குநம்பிக்கைஇல்லாத தன்மை கடந்த காலங்களில் இருந்து வருகின்றது.

இனிவரும் காலங்களிலும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுவேண்டும்என்றால்எல்லா விடயங்களிலும் சர்வதேச விசாரணையை ஏற்படுத்தினால்தான் எங்களுக்கு தீர்வு கிடைக்கும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# உதவிகள்







கனடா செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் நிதியேற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்றுகுடும்பங்களுக்கான வாழ்வாதார உதவியும், மன்னாரைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவரின் மருத்துவச் செல வுக்கான உதவு தொகையுமாக பன்னிரண்டு லட்சத்து மூவாயிரம் ரூபா பெறுமதியான உதவி அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் வழங்கிவைக்கப்பட்டுள்ளது. (05)

# தேசிய தரக்கணிப்பில் இரண்டு வெற்றிகளை சுவீகரித்தது கல்முனை சுகாதார பிராந்தியம்

சுகாதார அமைச்சால் நடத்தப்பட்ட காயங்கள் மற்றும் விபத்துக்கள் தொடர்பான முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்கின்ற சுகாதார நிறுவனங்களுக்கான தரக் கணிப்பீடுகளில் அமைச்சின் தொடர்ந்தேர்ச்சியானகண்காணிப்புகள்மற்றும் மேற்பார்வைகளை மேற்கொண்டு தகவல்களைப் பெற்று வெற்றி பெற்ற நிறுவனங்களுக்கான செயல்திறன் மதிப்பீட்டு தகுதி சான்றிதழ்களை புதன்கிழமைகொழும்புநாரஹேன்பிட்டி தேசிய இரத்த மாற்றீடு நிலையத்தின் கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்திய கலாநிதி சுனில் வீ அல்விஸ் அவர்களும் தேசிய தொற்றாநோய் பிரிவின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சமித் டிசமரக்கோன் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

தொற்றாநோய் பிரிவின் தேசிய காய தடுக்கும் கண்காணிப்பு செயல்முறையின் கீழ் 2022 ஆம் ஆண்டின் மாவட்ட மற்றும் மாகாண நிறுவனங்களிடையே மேற்கொள்ளப்பட்ட சிறந்த செயல் திறனுக்கான தேசிய மதிப்பாய்வு விருது வழங்கும் விழாவின் போது மேற்படி சிறந்த செயல்திறன் தகுதி சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த புறக்கணிப்பீடு முறைமையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை முதலாம் இடத்தையும் கல்முனை பிராந்தி சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய்ப் பிரிவு இரண்டாம் இடத்தையும் பெற்று பிராந்தியத்திற்கு பெருமை சேர்த்துள்ளன

இதற்கு அமைவாக தேசிய ரீதியாக நடைபெற்ற கணிப்பீடு ஒன்றில் முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்ற நிறுவனங்கள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்டவை என்ற காரணத்தால் தான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவதாகவும் இதற்காக அர்ப்பணிப்புடன்உழைத்தசகலருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதாகவும் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் தெரிவித்தார்.

இதற்கமைவாக சிறந்த ஒருங்கிணைப்புகளை வழங்கிய சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆசாத் ஹனிபாவுக்கும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய்ப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ். இர்சாத்துக்கும் விசேடமான நன்றிகளை பணிப்பாளர் தெரிவித்துக் கொண்டார். (05)



# அமெ. சென்ற ஜனாதிபதியின் குழுவில் மஹிந்தானந்த, ரோஹிதவும் இணைவு

## துஷாரா இந்துனில் கடும் சாடல்

விவசாயத்துறையை முழுமையாக சீரழித்த மஹிந்தானந்த அளுத்கமகே, கடல் வளத்தை அழித்த ரோஹித அபேகுவர்தன ஆகியோர் ஜனாதிபதியின் நியூயோர்க் விஜயத்தின் சிறப்பு தூதுக்குழுவினராகச் சென்றுள்ளனர்.

ஜனாதிபதியின் செயற்பாடுகள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. ஆளும் தரப்பில்சிறந்தவர்களை புறக்கணித்து கடுமையாக விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுபவர்களை இணைத்துக்கொள்வது முறையற்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துார இந்துனில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

புதிய வன கொள்கைக்கமைய, பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளதாக அமைச்சர் வன வளங்கள் மற்றும் வன விலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி குறிப்பிடுகிறார்.

யானை - மனித மோதல் பிரச்சினை காலம் காலமாக பேசப்படுகிறது. ஆனால் இதுவரை நிலையான தீர்வு எட்டப்படவில்லை. யானைகளின் வாழிடங்களை மனிதர்கள் ஆக்கிரமித்துள்ளதால் யானைகள் - மனிதர்கள் அண்டிய பகுதிக்குள் வாழ வேண்டிய நிலை காணப்படுகிறது.

வனவளங்கள் பாதுகாப்பு விடயத்தில் கிராம சேவையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். ஆனால், புதிய வன கொள்கை கிராம சேவகர்களின் அதிகாரங்கள் பல நீக்கப்பட்டுள்ளன.

வனஜீவராசிகள் திணைக்களத்தை அடிப்படையாகக் கொண்டு பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஆகவே ஆற்றில் முட்டியை வீசி இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்பதை அமைச்சர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொண்டுள்ளார். ஜனாதிபதியுடன் சிறப்புத் தூதுக் குழுவினர் சென்றுள்ளார்கள். விவசாயத்துறையை அழித்து நாட்டு மக்களின் போசனையை முழுமையாக இல்லாதொழித்த மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நியூ டைமன், எக்பிரஸ் போர்ல் கப்பலை நாட்டுக்குள் அழைத்து கடல்வளத்தை அழித்த ரோஹித அபேகுணவர்தன, மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் வழக்குகளுக்கு முன்னிலையாகிய ஆளும் தரப்பின் பின்வரிசை உறுப்பினர் தொலவத்தே ஆகியோர் ஜனாதிபதியின் சிறப்புத் தூதுக்குழுவினராகச் சென்றுள்ளார்கள்.

ஆளும் தரப்பில் சிறந்தவர்கள் பலர் இருக்கும் போது மக்களால் கடுமையாக விமர்சிக்கப்படும் தரப்பினரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தூதுக்குழுவினராக இணைத்துக் கொண்டுள்ளமை முறையற்றது. - என்றார். (05)

# உலக சமாதான நிகழ்வு முல்லைத்தீவில் நேற்று






உலக சமாதான நாளான நேற்று (வியாழக்கிழமை) முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

முல்லைத்தீவு மக்களிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலேயே உலகசமாதான நிறுவனமும், ஏனைய அரசநிறுவனங்களும் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

சர்வமத தலைவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நிகழ்வில் அனைத்து இனங்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நடன நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டிருந்தன.

தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தைச்சேர்ந்தமிகவும் பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் 180 பேருக்கு பாதணிகள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மாணவர்களை மகிழ்விப்பதற்கான இராணுவத்தினரின் இசை நிகழ்வும் விருந்துபசாரமும் நடை பெற்றிருந்தது. குறித்த நிகழ்வில்கிராமியபொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் , முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஜெயகாந்த், முல்லைத்தீவு இராணுவ பாதுகாப்பு தலைமையக பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் எம்.கே. ஜெயவர்த்தன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.(05)

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் போல எமக்கும் நட்டஈடு வழங்கவேண்டும்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோரிக்கை

வீடுகள் சேதமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படுமானால் குறித்த தாக்குதலில் சேதமடைந்த தனியார் பஸ்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'சுமார் 50 தனியார் பஸ்கள் சாம்பராகியுள்ளன. அதேபோல் சுமார் 50 பஸ்கள்பகுதியளவில்சேதமடைந்துள்ளன.

காப்புறுதி ஊடாக கிடைக்கும் நிதி போதுமானது அல்ல. வீடுகள் சேதமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் பஸ் உரிமையாளர்கள் ஒரு பகுதியினருக்கு கூட இது கிடைக்கவில்லை.

பஸ் ஒன்றுக்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியில் 50 பஸ்களுக்கு 500 மில்லியன் ரூபாவே செலவாகும். இது மிகப் பெரிய தொகையும் அல்ல. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அவிசாவளையில் துப்பாக்கி சூடு இருவர் சாவு; இருவர் படு காயம்

அவிசாவளை - தல்துவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கி பிரயோகம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோ ஒன்றை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஓட்டோவில் 4 பேர் பயணித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பயணித்த நால்வரில் இருவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்து அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நாட்டில் மீண்டும் இனமுறுகலை ஏற்படுத்தவே இந்த ஆட்சி முயற்சி

## இம்ரான் மஹ்ரூப் குற்றச்சாட்டு



அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை பார்க்கும் போது மீண்டும் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையே இன முறுகலை ஏற்படுத்தி அரசாங்கத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

அதேபோன்று ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை இனம் காண அரசாங்கத்தில் இருக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் எனக் கேட்கிறோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது எமது நாடு எந்த திசையை நோக்கி நகர்கிறது என்று சிந்திக்கத் தோன்றுகிறது. இன்று நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதான் தாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மீண்டும் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையே இன முறுகலை ஏற்படுத்தி அரசாங்கத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் செய்கிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இன்று மக்களின் பிரச்சினைகள் திசைதிருப்பப்படுகின்றன. உத்திக பிரேமரத்ன மீதான துப்பாக்கி பிரயோகம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை. மக்களின் பிரச்சினைகளை மறைக்க வேண்டும் என்பதற்காக பிரச்சினைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவை தொடர்பில் அரசாங்கம் உரிய முறையில் ஆராய வேண்டும்.


அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் மூலமாக இந்த நாட்டில் இனவாதம் தலைதூக்கப்பட்டது. முஸ்லிம்கள் அனைவரும் இனவாதிகளாக்கப்பட்டனர். நாட்டில் ஏற்பட்ட அரகலய போராட்டக்காரர்களை கைது செய்வதற்கு காட்டிய ஆர்வத்தை ஏன் ஈஸ்டர் தாக்குதலுக்குக் காட்டவில்லை.

தற்போதுள்ள பிரச்சினைக்குக் காரணமாக அமைந்தது ஈஸ்டர் தாக்குதலே. இன்று சில முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாரிய பேச்சாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவரும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டதைப் போன்று மக்களின் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுத்தது நாங்கள் தான் என்பதை இப்போதுதான் சுட்டிக்காட்டுகிறார்கள். நீங்கள் ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக்கண்டறிவதற்கு ஏன் முன்வரவில்லை என்பதை கேட்க விரும்புகிறேன்.

பல கூட்டங்களை பல இடங்களில் நடத்துகின்றீர்கள். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அன்று மௌனிகளாக இருந்தவர்கள் கோட்டாபய ராஜபக்ஷ துரத்தி அடிக்கப்பட்டதன் பின்னர் பெரிய பேச்சாளர்களாக மாறியிருக்கிறார்கள். ஆகவே, உங்களுக்கும் இந்த மௌலானாவுக்கும் என்ன வித்தியாசம் என நாம் கேட்ட விரும்புகிறோம். ஆகவே, இது தொடர்பில் அரசாங்கம் கூடுதலான கவனம் செலுத்தி ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியைக் கண்டறிய வேண்டும். - என்றார். (05)

# பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் துணைதலைவரை சந்தித்த சாணக்கியன்



*பிரித்தானியாவின் இந்தியா, இலங்கை மற்றும் இந்தியப் பெருங் கடல் (தென் ஆசியா) வலயத்துக்கான பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் துணைத் தலைவரான கமிலா சுக்டனை நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் புதன்கிழமை சந்தித்திருந்தார்.*

*இந்தச் சந்திப்பின் போது வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் மற்றும் கொடுத்துவரும் பிரச்சனைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பில் கருத்துத் தெரி வித்த சாணக்கியன் -*

*மே மாதத்துக்கு பின்னரான இலங்கைக்கான பிரித்தானியாவின் உயர்ஸ்தானிகர் இல்லாதவிடத்து தற்பொழுது ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*அதனடிப்படையில் இவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரை சந்திக்கும் நேரம் தான் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் ஊர்வலத்தின் போது தாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.*

*எனவே இச்சம்பவம் சம்பந்தமாகவும் எமக்கான உரிமைகள் மறுக்கப் படுதல் மற்றும் இன முறுகலை ஏற்படுத்தும் வகையில் அரசு நடந்து கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.*

*அத்துடன் மயிலத்தமடு மாதவனை போன்ற பிரதேசங்களில் இடம்பெறும் தமிழருக்கு சொந்தமான காணி அபகரிப்பு பற்றியும் திருகோணமலை மற்றும் பல பிரதேசங்களில் இடம்பெறும் அத்துமீறிய விகாரை அமைக்கும் நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. - இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*(05)*

# கடல் அரிப்புக்கு உடனடித் தீர்வு

## சாய்ந்தமருது மக்களுக்கு மகிழ்ச்சி

சாய்ந்தமருது கடல் அரிப்பு தொடர்பாக நகர திட்டமிடல் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் கொழும்பில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்கள மாகாண பொறியியலாளர் ஆகியோர் சாய்ந்தமருதின் தற்போதைய கடலரிப்பு நிலைகளையும், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய விடயங்களையும் அமைச்சர் மற்றும் கூடியிருந்த சபைக்கு விளக்கினர்.

கடலரிப்பின் அகோரம் காரணமாக மீனவர் வாடிகள், பள்ளிவாசல், அரச கட்டடங்கள், சிறுவர் பூங்காக்கள் பாதிக்கப்பட்ட விடயம் தொடர்பில் விளக்கி மீனவர்களின் மீன்பிடி முற்றாக கடலரிப்பால் பாதிக்கப்பட்ட விடயத்தை சபைக்கு முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ், கடலரிப்பை தடுப்பது தொடர்பில் உள்ள அவசர நிலையை அமைச்சருக்கு விளக்கியதுடன் நிந்தவூரில் முன்னெடுக்கப்பட்டது போன்று நிரந்தரமான தீர்வு வழங்கப்பட்டு மீனவர்களுக்கு அவர்களின் தொழிலை சிறப்பாக செய்ய வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் மூன்று தடுப்பு சுவர்களை முதலில் ஆரம்பித்து தொடர்ந்தும் தடுப்பு சுவர்களை அமைக்க வேண்டிய விடயத்தையும் வலியுறுத்தினார்.

இப்பணியை சாய்ந்தமருதில் முன்னெடுக்க 55 மில்லியன் அளவில் செலவாகும் என்ற விடயமும் இங்கு பேசப்பட்டது.

தொடர்ந்தும் இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் எ. எல். எம். அதாவுல்லா, இந்த விடயத்தை காலதாமதம் செய்யாமல் அவசரமாக ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதுடன், இதனால் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சவால்களையும் சபைக்கு ஆழமாக விவரித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எ.எம். ஜமீல், முன்னாள் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எ.எல். எம். சலீம், முன்னாள் கல்முனை மாநகர சபை முதல்வர் சிராஸ் மீராஸாகிப் ஆகியோர்களும் இந்த பிரச்சினையின் தீர்வுக்கான அவசியம் தொடர்பில் தமது கருத்துக்களை இங்கு முன்வைத்தனர்.

கூட்டத்தின் சகல விடயங்களையும் கேட்டறிந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கைவசமுள்ள 35 மில்லியனை கொண்டு வேலைகளை அவசரமாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளை பணித்தார். மீதி 20 மில்லியனை திறைசேரி மூலம் பெற்றுத்தர தான் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ஆலோசகரும், முன்னாள் அமைச்சருமான நிமால் லான்ஸா இதன்போது உறுதியளித்துள்ளார்.

இந்த விடயத்தை காலம் தாழ்த்தமல் அவசரமாக முன்னெடுக்குமாறு மீனவ சங்க நிர்வாகிகள் இதன்போது கேட்டுக்கொண்டனர். விலைமனு கோராமல் அவசரமாக கடல் அரிப்பை தடுப்பதுக்கான ஏற்பாடுகள் செய்ய அமைச்சின் செயலாளருக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்த விசேட அனுமதி பெறுவது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டதுடன் கல்முனை பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்த தேவையான வரைபடம், மதிப்பீடு தயாரிக்கவும் அதிகாரிகளுக்கு இதன் போது அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டதரணி எச். எம். எம். ஹரீஸ் முன்னெடுத்த இந்த கூட்ட ஏற்பாட்டுக்கான வேலைத்திட்டம் மீனவர்களுக்கு வெற்றியளிக்கும் வகையில் உடனடியாக ஆரம்பிக்க கரையோரம் பேணல் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது. (05)

# நிலாவத்தை தோட்டத்தின் 33 குடும்பங்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வை வழங்குக

## இராமேஷ்வரன் வலியுறுத்து



42 வருட காலமாக வாழ்ந்த இடத்தை விட்டு வெளியேறுமாறு அறிவித்தால் நிலாவத்தை தோட்ட மக்கள் எங்கு செல்வார்கள்.

33 குடும்பங்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஷ்வரன் வனஜீவராசிகள் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியராச்சியிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

வனஜீவராசிகள், வனவளங்கள் பாதுகாப்பு சட்டங்களால் பெருந்தோட்ட மக்கள் குடிநீர் பெற்றுக்கொள்வதிலும், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான நுவரெலியா அப்கொட் நிலாவத்தை தோட்டத்தில் 42 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக 33 குடும்பங்களை சேர்ந்தவர்கள் அப்பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

நிலாவத்தை தோட்டத்தில் வசிப்பவர்களை அப்பகுதியில் இருந்து வெளியேற்றும் வகையில் நீதிமன்றம் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வனஜீவராசிகள் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் இன்று நேற்று அப்பகுதியில் வாழ்ந்தவர்கள் அல்லர், 42 வருடங்களாக அப்பகுதியில் வாழ்ந்து நாட்டுக்காக உழைத்துள்ளார்கள்.

நீதிமன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பில் எதனையும் எம்மால் குறிப்பிட முடியாது. இவர்கள் இலங்கையர்கள் உடனடியாக வாழ்ந்த இடத்தை விட்டு செல்லுமாறு குறிப்பிட்டால் அவர்கள் எங்கு செல்வார்கள்.

ஆகவே, இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து 33 குடும்பங்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஒரு தீர்மானத்தை பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்துகிறேன். - என்றார். (05)


தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம்
2023
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
A1
Chrysalis
Catalyzing change
ஊடாக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கொக்குத்தொடுவாய்

# மனிதப் புதைகுழி விடயத்தில் அநீதி இழைக்கப்படுமா?

## அச்சம் வெளியிடுகிறார் து.ரவிகரன்



கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தில் அநீதி இழைக்கப்படுமோ? என்ற அச்சம் காணப்படுவதாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்திற்கு நீதி கோரி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவால் நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய தினம் (நேற்று) உலக சமாதானதினமாகும். ஆனால் இலங்கையை பொறுத்தவரை சமாதானம் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்திலே அநீதி இழைக்கப்படுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. அதேபோன்று ஐ.நாவின் ஆணையாளர் நாயகம் இலங்கையிலே போர்க்குற்றம் மீறப்பட்டுள்ளது, மனித உரிமை மீறப்பட்டுள்ளது, வறுமையில் இலங்கை 25 வீதமாக இருக்கின்றது, சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கள் அடங்கிய அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

எங்களுடைய கதறல்கள், கூக்குரல்கள் வீதிகளில் நின்று போராடுகின்ற போராட்டங்கள் என அத்தனை போராட்டங்களாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்து குறிப்பிடப்பட்டும் சர்வதேச நாடுகள் ஏன் இதுவரை தலையிடவில்லை. இப்படி ஒரு கொடுமையான அரசுக்கு கீழ் தான் நாம் வாழ்கின்றோம்.

வடக்கு கிழக்கு மக்களின் நிலங்களை எடுக்கின்றார்கள், சிறுக சிறுக மதங்களை அழிக்கின்றார்கள் பௌத்த மயமாக்குகின்றார்கள். கடலும் பறிபோய் கொண்டிருக்கின்றது. இப்படி எமது வாழ்வாதாரம் உட்பட நிலங்களையும் அபகரித்து எங்களை பூர்வீகமற்றவர்களாக்குகின்றார்கள் இந்நிலை மாற வேண்டும்.

சனல் 4 ஊடகத்தில் ஈஸ்டர் குண்டு தாக்குதல் காணொளி வெளியானதன் பிற்பாடு 300 இற்கு மேற்பட்ட மக்கள் இறந்ததற்காக எல்லோரும் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அதை நாம் மறுக்கவில்லை. கொலைகார கும்பல் தான் ஆட்சியில் இருக்கின்றது. ஆண்டாண்டு காலமாக ஆட்சி செய்து வந்திருக்கின்றது. என்பதற்கு மறுப்பதற்கில்லை. ஆனால் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இறந்து பல ஆண்டுகாலமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் கொடுமை இந்த அரசாங்கத்திற்கு ஏன் எங்கள் நிலைமை அவர்களது பார்வையில் படவில்லை.

சர்வதேசம் நேரடியாக இதற்குத் துணைநிற்க வேண்டும் அல்லது சர்வதேச ஆணையாளர் அறிக்கைகேற்ப கருணை காட்டி இலங்கை அரசாங்கத்தை சர்வதேச பொறிமுறைகுள் விசாரணைக்குட்படுத்தி நீதியைப்பெற்றுத்தர வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார்.(05)

# யாழில் கால் பதித்துள்ளது 'சனச லைஃப் இன்சூரன்ஸ்'



சனச லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 20 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அந்நிறுவனத்தின் கிளையொன்று நேற்று(வியாழக்கிழமை) யாழில் திறக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் சேவையின் மூலம் அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களை கவரும் முயற்சியில் சனச லைஃப் இன்சூரன்ஸ் யாழில் தனது கிளையை ஆரம்பித்துள்ளது.

நேற்று காலை 10 மணியளவில் அந்நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பங்கேற்போடு, மங்கள வாத்தியங்கள் முழங்க யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் புதிய கிளை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யாழில் பல இன்சூரன்ஸ் நிறுவனங்கள் போட்டிபோட்டு தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிலையில், சனச லைஃப் இன்சூரன்ஸ் யாழில் காலடி எடுத்துவைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் இந்த நிறுவனம் திறந்துவைக்கப்படுவதாக அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் தமது சேவைகளை நேரடியாக வீடுகளுக்கே வந்து வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அந்நிறுவனத்தின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்துள்ளனர்.(05)

# அறுகம்பை சுற்றுலா அபிவிருத்திதிட்டம் தொடர்பாக விசேட கலந்துரையாடல்



அறுகம்பை சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தின் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகலரத்நாயக்கவின் தலைமையிலேயே அந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அறுகம்பை பகுதியை அடிப்படையாக கொண்டு அம்பாறை மாட்டத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் முதற்கட்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அறியப்பட்ட பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது.

அதற்கமைய இப்பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டின் போது ஏற்படும் சவால்கள் தொடர்பாக இங்கு விரிவாக அவதானம் செலுத்தப்பட்டது.

அத்தோடு, அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்தற்காக துறைசார் நிறுவனங்களின் தலையீடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்ட சுற்றுலாத்துறை திட்டமும் வெளியிடப்பட்டதோடு, மூன்று வருடங்களுக்கான மேற்படி திட்டத்தை ஜனாதிபதியின் கருத்தறிவதற்காக சமர்ப்பிக்கவுள்ளதாக சாகலரத்நாயக்க தெரிவித்தார்.

இந்தச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மீண்டும் கூடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (05)

# எனக்கு தேவை நீதி இழப்பீடுகள் அல்ல

## ஜோன்ஸ்டன் பெர்னான்டோ திட்டவட்டம்

கலவரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடுகளை வழங்குவதை விட குறித்த பிரச்சினைகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதே அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

எங்களுக்கு இழப்பீடு வழங்குதல் என்னுடைய துக்கம் சந்தோசம் குறித்து பிரச்சினை இல்லை.

அன்று அவ்வாறு நடந்துக் கொண்டது சரியா பிழையா என்பது பற்றியே பேச வேண்டும். பயங்கரவாதத்துக்கு இடமளிக்க முடியுமா?

தீ வைத்தது சரியா? அமரகீர்த்தியை கொலை செய்தது சரியா? அதனைத்தான் கேட்க வேண்டும். இழப்பீடு அல்ல.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவரின் வீட்டிற்கு சென்று தாக்குதல் நடத்தியது சரியா? எல்லாமே பிழைதான்.

87, 89 களில் அப்பாவி மக்களை கொன்றது சரியா?



அவைகள் பிழை என்றால் காலிமுகத்திடல் தாக்குதலும் பிழைதான். - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# சர்வதேச நீதிப் பொறிமுறையை வேண்டி மட்டக்களப்பில் கவனவீர்ப்பு போராட்டம்




மட்டக்களப்பில் இலங்கையில் இடம்பெற்ற போர்குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிப் பொறிமுனையை உறுதிசெய்யுமாறு கோரி நேற்று (வியாழக்கிழமை) காந்திபூங்காவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர். இதன்போது ஐ.நாவிற்கான அறிக்கை ஒன்றையும் மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளிடம் ஆர்ப்பாட்டகாரர்கள் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# தேசிய மட்டத்துக்குத் தெரிவான போட்டியாளர்களுக்கு கௌரவம்





கல்வி அமைச்சால், அண்மையில் நடத்தப்பட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டியில், மாகாண மட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு புதன்கிழமை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் காலை ஆராதனையின் போது மாகாண மட்டத்தில், கிறியேற்றிவ் றைற்றிங் இல் முதலிடம் பெற்ற தரம் 9 இனைச் சேர்ந்த சி. ஆர்.மாக் அஹ்மத், மாகாணப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற தரம் 13 இனைச் சேர்ந்த என். பாத்திமா அறூப், சிரேஸ்ட நாடகப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்த நாடக் குழுவினர்களுக்கான பதக்கங்கள், கல்லூரி முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் ஆசிரியர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை குறித்த மாகாணப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் இம்மாதம் இடம் பெறும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர். (05)

# சரத் பொன்சேகா - மைத்திரி சவையில் கடும் சொற்போர்



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தின் போது சரத் பொன்சேகாவுக்கும், மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் இருந்த இருவரில் ஒருவர் மைத்திரிபால சிறிசேன என சரத் பொன்சேகா தெரிவித்த போது கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

இதற்கு பதிலளித்த மைத்திரி பால சிறிசேன, முன்னாள் இராணுவத் தலைமையகத்தைக் கூட பாதுகாக்க முடியாமல் தாக்குதலுக்குப் பின்னர் பொன்சேகா குடல் சேதமடைந்த நிலையில் சென்றார் எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பொன்சேகா, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர்களில் இவரும் ஒருவர் என்றும் இந்த முட்டாளுக்கு இராணு வத் தளபதியின் கடமைகள் புரியவில்லை என்றும் கூறினார்.

இதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் இறந்தனர் எனத் தெரிவித்தார்.

அத்தோடு 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக இவரை ஆதரித்ததற்கு நாங்கள் வருந்துகிறோம் என்றும் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2023இல் வெளியிடப்பெற்றது.